தரம் 10 பாடம் 1

# இறைவனே படைப்பிற்கெல்லாம் மூல காரணர்

## திருவிவிலியத்தில் விசேட பிறப்பு குறித்த இறைவாக்குகள்

## இறைவாக்கும் இயேசுவின் பிறப்பும்

| இறைவாக்குகள் (பழைய ஏற்பாடு) | நிறைவேறியமை (புதிய ஏற்பாடு) |
|---|---|
| 1. ஏசாயா 7:14 | மத்தேயு 1:22-23 |
| 2. ஏசாயா 11:1 | லூக்கா 1:32 |
| 3. ஏசாயா 9:2 | மத்தேயு 4:16<br>லூக்கா 1:79 |
| 4. ஏசாயா 9:6 | லூக்கா 1:31-32 |
| 5. ஏசாயா 9:7 | லூக்கா 1:33 |
| 6. மீக்கா 5:2 | மத்தேயு 1:17 |

வருகிறவரின் அரசில் காணப்படும் விழுமியங்கள் இயேசுவின் குணாதிசயங்களில் வெளிப்படுத்தப்படும். நீதியும் நேர்மையும் அவற்றுள் பிரதானமானவையாகும். ஆண்டவர் இயேசு அனைத்து மக்களின் அரசனாக இருப்பது அதிகாரத்தினால் அன்றி நீதியினால் ஆகும். உலகின் அமைதியின் குமாரனாக என்றென்றும் விளங்குவார். ஏசாயா 49:2 "என் வாயைக் கூரான வாள்போன்று ஆக்கினார்; தம் கையின் நிழலால் என்னைப் பாதுகாத்தார்; என்னைப் பளபளக்கும் அம்பு ஆக்கினார்; தம் அம்பறாத் தூணியில் (அம்புக்கூடு Quiver often from fear) என்னை மறைத்துக் கொண்டார்."

பழைய ஏற்பாட்டில், இறைவாக்கினர்கள் உரைத்த இறை வாக்குகளை புதிய ஏற்பாட்டில் நிறைவேறிய சந்தர்ப்பங்களுடன் தொடர்புப் படுத்துக.

| இறைவாக்குகள் (பழைய ஏற்பாடு) | நிறைவேறியமை (புதிய ஏற்பாடு) |
|---|---|
| A. ஏசாயா 7:14 | D. லூக்கா 1:31-32 |
| B. ஏசாயா 11:1 | E. லூக்கா 1:33 |
| C. ஏசாயா 9:2 | A. மத்தேயு 1:22-23<br>F. மத்தேயு 1:17 |
| D. ஏசாயா 9:6 | C. மத்தேயு 4:16 |
| E. ஏசாயா 9:7 | B. லூக்கா 1:32 |
| F. மீக்கா 5:2 | C. லூக்கா 1:79 |

கொழும்பு மறைமாவட்ட, இலங்கைத் திருச்சபை கிறிஸ்தவ கல்விமன்றத்தால் தயாரிக்கப்பட்டது

# இறைவனே படைப்பிற்கெல்லாம் மூல காரணர்

## விசேட பணிகள் குறித்த இறைவாக்குகள்

## சிறப்புப் பணி

<u>கற்றல் பேறு :-</u>

- இயேசு துன்பங்களுக்கு மத்தியில் விசேட பணிகளை ஆற்றினார். – ஏசாயா 53:4-5 – துன்புறும் ஊழியம். எமக்காக துன்புற்றார்.
- இயேசுவின் பணி குறித்த இறைவாக்கு - இயேசுவின் விசேட பணியூடாக நீதி தழைத்தோங்கியது. – ஏசாயா 42:4
- இறைவாக்கினர் ஏசாயா திருமுழுக்கு யோவானைக் குறித்து கூறிய இறைவாக்கு – திருமுழுக்கு யோவான் வழியை ஆயத்தம் செய்யும் முன்னோடிப் பணியை ஆற்றினார். – ஏசாயா 40:3-4
- திருமுழுக்கு யோவான் பற்றிய இறைவாக்கினர் மலாக்கியின் இறைவாக்கு (முன்னுரைப்பு) – மலாக்கி 3:1
- முதல் சுவிஷேசகர் பிலிப்பு இயேசுவின் சேவகத் தன்மையைக்கு குறித்து எத்தியோப்பிய நிதி அமைச்சருக்கு விளக்கியது, திருவிவிலியப்பகுதியில் இயேசுவின் தியாகத்தை எடுத்து காண்பிக்கின்றது. - திருத்தூதர் பணிகள் 8:32-33 (இந்த தியாகப்பலி மூலம் இயேசு, இறைவனுக்கும் மனிதருக்கும் இடையில் முறிந்த உறவைப் புதுப்பித்துள்ளார்.)
- இயேசுவின் பிறப்பிற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் இயேசுவின் பணி குறித்து (கி.மு. 700 ஆண்டளவில்) ஏசாயா இறவாக்கினர் முன்னறிவித்துள்ளார். – ஏசாயா 61:1
- இயேசு -
  - சுகமளித்தார் (தொழுநோய்)
  - தவறை உணர வைத்தார். (சகேயு, பரிமளம் பூசிய பெண், விபசாரத்தில் பிடிப்பட்ட பெண்)
  - பசியை போக்கினார்.

<u>இவ்வாறாக தனது வாழ்வின் முன்மாதிரிகள் மூலம் சேவை செய்த இயேசு நம்மையும் சேவையைக் பெற அல்ல சேவையைச் செய்ய அழைக்கின்றார்.</u>

செயற்பாடு :-

கிறிஸ்தவ மாணவராகிய நீர் வீட்டில், பாடசாலையில், சமுதாயத்தில் எவ்வாறு சேவை செய்ய முடியும் ?

- ❖ ஒரு வார்த்தையில் கீழ்படிவதன் மூலம்.
- ❖ அடம்/பிடிவாதம் பிடிக்காமல் இருந்து.
- ❖ வழி தப்ப இருக்கும் நண்பர்கள் அல்லது சக மாணவர்களை நல்வழி படுத்துவதன் மூலம்.
- ❖ பாடங்கள் விளங்காத மாணவர்களுக்கு பாடங்களை விளங்கப்படுத்தி கொடுப்பதன் மூலம்.
- ❖ ஆசிரியர்களுக்கு உதவுவதன் மூலம்.
- ❖ பாடசாலை சுற்றாடலை, வகுப்பறையை சுத்தமாக வைத்திருப்பதன் மூலம்.
- ❖ தேங்கி நிற்கும் தண்ணீரை சரியான முறையில் அகற்றுவதன் மூலம்.
- ❖ கிறிஸ்தவ விழுமியங்களோடு சமதாயத்தில் எல்லாருடனும் அன்புடனும் நட்புடனும் பழகி அவர்களது தேவைகளுக்கு உதவுவதன் மூலம்.
- ❖ எனது வேலையை பிறர் செய்யும் வரை இராது என் வேலைகளை உடனுக்குடன் செய்வதன் மூலம்.

**தரம் 10 பாடம் 3**

## ஆண்டவர் இயேசுவின் முழுமையான வாழ்வினாலும் பணியினாலும் நாம் புத்தொளி பெறுவோம்.

## இறை சித்தத்தை கீழ்படிவுடன் நிறைவேற்றுவோம்

## விசேட பிறப்புக்களின் முன்னறிவிப்பு
## (இயேசு, திருமுழுக்கு யோவான்)
## (இறைத்திட்டத்திற்கு கீழ்ப்படிந்தோர்)

- எமக்கு இறைச்சித்தம் வெளிப்படுத்தப்படும்.
- இறை சித்தத்திற்கு தலை வணங்க வேண்டும்.
- இறை வழிநடத்தலை பெற்று ஒற்றுமையாக வாழ வேண்டும்.

**லூக்கா 1:5-56**

லூக்கா 1:5-25 குழந்தைப் பருவ நிகழ்ச்சிகள் - யோவான் பிறப்பைப் பற்றி முன்னறிவித்தல்.

லூக்கா 1:26-38 இயேசுவின் பிறப்பை முன்னறிவித்தல்.

லூக்கா 1:39-45 மரியா எலிசபெத்தைச் சந்தித்தல்.

லூக்கா 1:46-56 மரியாவின் பாடல்.

**கொழும்பு மறைமாவட்ட, இலங்கைத் திருச்சபை கிறிஸ்தவ கல்விமன்றத்தால் தயாரிக்கப்பட்டது**

**தரம் 10 பாடம் 4**

## திருவிவிலியப் புதிர் - லூக்கா 1:5-56

1. செக்கரியா என்னும் பெயர் கொண்ட குரு எக்காலத்தில் இருந்தார் ?
   யூதேயா நாட்டில் ஏரோது அரசனாக இருந்த காலத்தில் - 1:5

2. செக்கரியாவின் மனைவி யார் ? அவர் எந்த (வழி) வம்சத்தார் ?
   எலிசபெத், ஆரோனின் வழி – 1:5

3. கடவுளின் பார்வையில் நேர்மையானவர்களாய் விளங்கியவர்கள் யார் ?
   செக்கரியா, எலிசபெத்து – 1:6

4. பிள்ளை இல்லாத செக்கரியா, எலிசபெத்து எப்படிப்பட்டவர்களாக இருந்தார்கள் ?
   கடவுளின் பார்வையில் நேர்மையானவர்கள். ஆண்டவருடைய அனைத்துக் கட்டளைகளுக்கும், ஒழுங்குகளுக்கும் ஏற்ப குற்றமற்றவர்களாய் நடந்து வந்தார்கள். – 1:6

5. ஏன் எலிசபெத்துக்கும், செக்கரியாவுக்கும் பிள்ளை இல்லாது இருந்தது ?
   எலிசபெத்து கருவுற இல்லாதவராய் இருந்தார். மேலும் அவர்கள் வயது முதிந்தவர்களாயும் இருந்தார்கள். – 1:7

6. எதன் அடிப்படையில் ஆண்டவரின் திருக்கோவிலுக்குள் சென்று தூபம் காட்டுவது யாரென்று அறியச் சீட்டு குலுக்கி போடப்பட்டது. ?
   குருத்துவப் பணி மரபுக்கு ஏற்ப. – 1:9

7. செக்கரியா திருக்கோவிலுக்குள் தூபம் காட்டுகிற வேளையில் மக்கள் கூட்டத்தினர் அனைவரும் எங்கெ இருந்தனர் ? என்ன செய்து கொண்டிருந்தனர் ?
   திருக்கோவிலுக்கு வெளியே இருந்தனர்.
   இறைவனிடம் வேண்டிக்கொண்டிருந்தனர் – 1:10

8. செக்கரியா தூபம் காட்டும் போது என்ன நடந்தது ?
   ஆண்டவருடைய தூதர் ஒருவர் பலிபீடத்தின் வலப்பக்கத்தின் தோன்றினார். - 1:11

9. தூப பீடத்தண்டை தோன்றிய தூதன் யோவனைப் பற்றி என்ன கூறினார் ?
   யோவானில் பிறப்பால் பலரும் மகிழ்ச்சியடைவர். ஆண்டவர் பார்வையில் பெரியவராய் இருப்பார். திராட்சை மதுவோ வேறு எந்த மதுவோ அருந்த மாட்டார். தாய் வயிற்றில் இருக்கும் போதே தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்படுவார். அவர், இஸ்ரயேல் மக்களுள் பலரைத் தம் கடவுளாகிய ஆண்டவரிடம் திருப்பி வரச் செய்வார். எலியாவின் உளப்பாங்கையும் வல்லமையையும் உடையவராய் அவருக்கு முன் செல்வார். தந்தையரும் மக்களும் உளம் ஒத்துப்போகச் செய்வார். நேர்மையானவர்களின் மனநிலையைக்

கீழ்ப்படியாதவர்களில் பெறச் செய்வார். இவ்வாறு ஆண்டவருக்கு ஏற்புடைய ஒரு மக்களினத்தை ஆயத்தம் செய்வார். – 1:14-17

10. வானதூதர் செக்கரியாவிடம் “உனது மன்றாட்டு கேட்கப்பட்டது” என்று கூறியவுடன் செக்கரியாவின் பதில் என்னவாக இருந்தது ?

“இது நடைபெறும் என எனக்கு எப்படித் தெரியும் ? நான் வயதானவன். அதுபோல் என் மனைவியும் வயது முதிந்தவராயிற்றே” என்றான். - 1:18

11. காபிரியேல் யார் ?

கடவுளின் திருமுன் நிற்பலன். செக்கரியாவோடு பேசவும் யோவானின் பிற்பலன் நற்செய்தியை செக்கரியாவுக்கு அறிவிக்கவும் அனுப்பப்பட்டவன். – 1:19

12. ஏன் “செக்கரியா பேச்சற்றவராயிருப்பீர்” என காபிரியேல் கூறினார் ?

யோவானின் பிறப்பை நம்பாதபடியால். – 1:20

13. ஏன் திருக்கோவிலின் வெளியே இருந்த மக்கள் வியப்படைந்தனர் ?

செக்கரியாவுக்காக காத்திருக்கும் போது அவர் காலந் தாழ்த்துவதைக் குறித்து வியப்படைந்தார்கள். – 1:21

14. செக்கரியா திருக்கோவில் வெளியே வந்த போது மக்களிடம் பேச முடியாமல் இருந்ததால் மக்கள் என்ன செய்தார்கள் ?

செக்கரியா திருக்கோவிலில் ஏதோ காட்சி கண்டிருக்க வேண்டும் என உணர்ந்துக் கொண்டார்கள். – 1:22

15. செக்கரியாவின் மனைவி எலிசபெத்து கருவுற்ற பின் எத்தனை மாதமளவும் பிறர் கண்ணில் படாதிருந்தார் ?

ஐந்து மாதமளவும். – 1:24

16. செக்கரியாவின் மனைவி எலிசபெத்து யோவனை கருவுற்ற பின் தமக்குள் சொல்லிக்கொண்டது என்ன ?

“மக்களுக்குள் எனக்கிருந்த இகழ்ச்சியை நீக்க ஆண்டவர் என் மீது அருள் கூர்ந்து இந்நாளில் என்னை கருவுறச் செய்தருளினார்” என்றார். – 1:24

17. காபிரியேல் என்னும் வானதூதர் எத்தனையாவது மாதம் எங்கு யாரிடம் கடவுளால் அனுப்பப்பட்டார் ?

கலிலேயாவிலுள்ள நாசரேத்து என்னும் ஊரிலிருந்த ஒரு கன்னியிடம் ஆறாம் மாதத்தில். – 1:26

18. மரியா எந்த குடும்பத்தினராகிய யாருடன் மண ஒப்பந்தமாகியிருந்தார் ?

தாவீது குடும்பத்தினராகிய யோசேப்புடன். – 1:27

19. "அருள்மிகப் பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்" யாரால் யாருக்கு கூறப்பட்டது ?

    வானதூதர் காபிரியேலால் மரியாவுக்கு கூறப்பட்டது. – 1:28

20. "அவர் பெரியவராயிருப்பார் உன்னத கடவுளின் மகன்" என்று யாரைப்பற்றி யாரால் யாரிடம் கூறப்பட்டது ?

    இயேசுவைப் பற்றி வானதூதர் காபிரியேலால் மரியாவுக்கு. – 1:32

21. உன்னத கடவுளின் தந்தை இயேசுவுக்கு எதை அளிப்பதாக வானதூதர் காபிரியேல் மரியாவிடம் கூறினார் ?

    தாவீதின் அரியணையை. – 1:32

22. மரியா கேட்ட எந்த கேள்விக்கு வானதூதர் "தூய ஆவி உம்மீது வரும். உன்னத கடவுளின் வல்லமை உன் மேல் நிழலிடும்." என்று பதிலளித்தார். ?

    "இது எப்படி நிகழும். நான் கன்னி ஆயிற்றே." – 1:34-35

23. ஏன் வானதூதர் "கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை." என்று கூறினார் ?

    எலிசபெத்தும் தம் முதிர்ந்த வயதில் ஒரு மகனை கருத்தரித்தபடியால், கருவுற இயலாதவர் என்று சொல்லப்பட்ட அவருக்கு இது 6ம் மாதம். – 1:36-37

24. மரியா கூறிய எந்த பதிலுக்கு பின் வானதூதர் அவரை விட்டு அகன்றார் ?

    "நான் ஆண்டவரின் அடிமை உம் சொற்படியெ என நிகழட்டும்." என்று கூறிய பின். – 1:38

25. செக்கரியா, எலிசபெத்து ஆகியோரின் வீடு எங்குள்ளது ?

    யூதேயா மலைநாட்டிலுள்ள ஓர் ஊரில். – 1:39

26. மரியாவின் வாழ்த்தைக் கேட்ட எலிசபெத்துக்கு என்ன நடந்தது ?

    எலிசபெத்துவின் வயிற்றிலிருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளிற்று. – 1:41

27. "என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார் ? " என்று யாரால் யாருக்கு கூறப்பட்டது ?

    எலிசபெத்து மரியாவிடம். - 1:43

28. "ஆண்டவர் உமக்கு சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறு பெற்றவர்." என்று யாரால் யாரிடம் கூறப்பட்டது ?

    எலிசபெத்து மரியாவிடம். - 1:45

29. மரியா எவ்வளவு காலம் எலிசபெத்துடன் தங்கியிருந்தார் ?

ஏறக்குறைய 3 மாதம். – 1:56

30. உள்ளத்தில் செருக்குடன் சிந்திப்போருக்கு நேரிடுவது என்னசிதறடிக்கப்படுவர். – 1:51

**தரம் 10 பாடம் 5**

## கிறிஸ்தவ பிள்ளை என்ற அடிப்படையில் தேசிய பாரம்பரியங்களை மதிக்க வேண்டும்.

### இயேசுவும் யூத சம்பிரதாயங்களும்


**(இயேசுவில் நிறைவேற்றப்பட்ட யூத சம்பிரதாயங்கள்)**

- ❖ இயேசுவுக்காக அவரது பெற்றோர் நிறைவேற்றிய யூத சடங்குகள்.
- ❖ இயேசு தனது பெற்றோருக்கு கீழ்படிவுள்ள பிள்ளையாக வளர்ந்தார்.
- ❖ நாமும் தேசிய பாரம்பரியங்களுக்கு மதிப்பளிக்க வேண்டும்.
- ❖ நாம் கிறிஸ்தவராக தேசிய தனித்துவத்தோடு வாழ வேண்டும்.

| | | |
|---|---|---|
| லூக்கா | 2:21-38 | இயேசுவைக் கோவிலில் அர்ப்பணித்தல். |
| | 2:39-40 | குழந்தை இயேசுவை நாசரேத்துக்குத் திரும்ப தூக்கிச் செல்லல். |
| | 2:41-52 | கோவிலில் சிறுவன் இயேசு. |

- ❖ விருத்தசேதனமானது யூதச் சடங்காகும்.
- ❖ இயேசுவுக்காக அவரது பெற்றோர் விருத்தசேதனச் சடங்கை நிறைவேற்றினர்.
- ❖ தூய்மைச் சடங்கானது, ஆண்பிள்ளையை இறைவனுக்கு அர்ப்பணிப்பதற்காக செய்யப்படும் யூத சடங்காகும்.
- ❖ சிமியோனும் அன்னாவும் மெசியாவின் வருகையை எதிர்ப்பார்த்திருந்தனர்.
- ❖ சிமியோனும் இயேசுவைக் குறித்த இறைவாக்குறைத்தனர்.
- ❖ 12 வயதில் இயேசு பஸ்கா விழாவை கொண்டாட சென்ற முறை.
- ❖ எமது வாழ்வை இறைவனுக்கு அர்ப்பணிக்க வேண்டும்.
- ❖ கிறிஸ்தவர்களாக நாம் மதிப்பளிக்க வேண்டிய சடங்குகளுக்கு மதிப்பளிக்க வேண்டும்.

<u>பன்னிரண்டாம் வயதில் இயேசு எருசலேமுக்குச் சென்ற பிரயாணம்</u>




கொழும்பு மறைமாவட்ட, இலங்கைத் திருச்சபை கிறிஸ்தவ கல்விமன்றத்தால் தயாரிக்கப்பட்டது

| **ஆன்மீக போசனை பெற்ற ஆண் ஒருவரினதும், பெண் ஒருவரினதும் அனுபவங்கள்** | |
|---|---|
| **<u>சிமியோன்</u> (கடவுள் கேட்கின்றவர்)**<br>(இவர் கமாலியேலின் தகப்பனாய் இருக்கலாம் என உத்தேசிக்கிறார்கள்.)<br>❖ தாழ்மையும் நம்பிக்கையும் நிறைந்தவர்.<br>❖ தூய ஆவியால் நிறைந்தவர்.<br>❖ மரிப்பதற்கு முன்னர் மெசியாவைக் காண்பார் என்று அறிவிக்கப்பட்டிருந்தவர். | **<u>அன்னா</u> (இறைவாக்கினர்)**<br>❖ திருக்கொவிலில் எப்போதும் மன்றாடிக் கொண்டிருந்தவர்.<br>❖ நோன்பு நோற்றல், மன்றாடல் என்பவற்றின் மூலம் கடவுளுடன் தொடர்பு கொண்டிருந்தவர்.<br>❖ திருக்கோவிலில் வழிபாட்டில் ஈடுபட்டவர். |
| <u>சிமியோன் பாடலின் முக்கியத்துவம்</u><br>❖ இயேசுவை மெசியாவாக இனம்காணல்.<br>❖ மெசியா தரும் விடுதலை சகல இனத்தவருக்கும் கிடைக்கக்கூடியது.<br>❖ மெசியா இஸ்ரயேல் மக்களின் பெருமைக்குறியவர். (மகிமையாவார்)<br>❖ மெசியா தரும் விடுதலை அனைத்துப் பிற இனத்தாருக்கும் உரியது.<br>❖ மெசியாவை ஏற்றுக்கொள்ளாதவர்களின் வீழ்ச்சி.<br>❖ இயேவின் வாழ்வில் அவர் எதிர்நோக்கும் தியாகத்தை நினைத்து அவரின் தாயாகிய மரியாவின் வேதனை. | <u>அன்னா அறிவித்தவை</u><br>❖ மெசியாவுக்காக நன்றி கூறுதல்.<br>❖ எருசலேமின் விடுதலையை எதிர்ப்பார்த்திருந்த யூதரல்லாதோருக்கும் விடுதலையாளரான இயேசுவை அறிமுகம் செய்தல்.<br><br>மெசியா - எபிரேயச் சொல்<br>கிறிஸ்டொஸ் - கிரேக்கச் சொல்<br>பொருள் - மீட்பர்<br>அருள் பொழிவு பெற்றவர். |

# திருமுழுக்கு யோவானின் மனந்திரும்புதலின் செய்தியை வாழ்வுக்கு உறுதுணையாக கொள்ள வேண்டும்.

## திருமுழுக்கு யோவானின் முன்னோடிப் பணி

**லூக்கா 3:1-20**

- திருமுழுக்கு யோவான் மக்களுக்கு வழங்கிய போதனைகளின் கருத்துக்கள்.
- நல்லவைகளை செய்து சமூகத்தை கட்டி எழுப்ப முடியும்.
- பிறருக்கு முன்மாதிரியாக வாழலாம்.
- எமது உடைமைகளை பகிர்ந்து வாழ வேண்டும்.

**லூக்கா 3:7-14**

- திருமுழுக்கு யோவான் யூத சமூகத்துக்கு மனம்திரும்புதலின் செய்தியை அறிவித்தார்.
- இன்று சமூகத்தில் அநீதி அரசாளுகின்றது.
- ஊழல் காணுமிடத்து அதற்கு எதிராகச் செயற்பட வேண்டும்.

1. <u>பொது மக்களுக்கு</u>

மக்கள் - "அப்பொழுது நாங்கள் என்ன செய்யவேண்டும் ? "

திருமுழுக்கு யோவான் - "இரண்டு அங்கிகள் உடையவர் இல்லாதவரோடு பகிர்ந்து கொள்ளட்டும். உணவை உடையவரும் அவ்வாறே செய்யட்டும்."

லூக்கா 3:10-11

2. <u>அரச பணியில் ஈடுபட்டிருந்தோருக்கு</u>

வரி தண்டுவோர் (ஆயக்காரர்) - "போதகரே நாங்கள் என்ன செய்யவேண்டும் ? "

திருமுழுக்கு யோவான் - "உங்களுக்கு குறிக்கப்பட்ட தொகைக்கு அதிகமாக எதையும் தண்டாதீர்கள்."

லூக்கா 3:12-13

3. <u>உரோமப் பட வீரர்களுக்கு</u>

படை வீரர் - "நாங்கள் என்ன செய்யவேண்டும் ? "

திருமுழுக்கு யோவான் - "நீங்கள் எவரையும் அச்சுறுத்திப் பணம் பறிக்காதீர்கள். யார் மீதும் பொய்க் குற்றம் சுமத்தாதீர்கள். உங்கள் ஊதியமே போதும் என்றிருங்கள்."

லூக்கா 3:13-14

4. <u>யூத மக்களுக்கு (யூத ஜனத்ததாருக்கு)</u>

"ஆபிரகாம் எங்களுக்கு தந்தை என உள்ளத்தில் சொல்லத் தொடங்காதீர்கள். இக் கற்களில் இருந்தும் ஆபிரகாமுக்குப் பிள்ளைகளைத் தோன்றச் செய்யக் கடவுள் வல்லவர் என உங்களுக்குச் சொல்லுகிறேன்."

லூக்கா 3:8

- லூக்கா 3:16
- லூக்கா 3:17

பாடசாலையில் கற்று பயின்று வளரும் பிள்ளைகளுக்கு சமூகத்தின் புதிய மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு திருமுழுக்கு யோவானின் மனந்திரும்புதலின் பெரும் செய்தி பெரும் சவாலாக அமையலாம். தீய செயல்களில் ஈடுபட ஊந்தப்படும் போது திருமுழுக்கு யோவானின் அறிவுரையை நினைவுப்படுத்திக்கொள்ள வேண்டும். அப்பொழுது சவால்களின் மத்தியிலும் நல்வழியில் செல்வதற்கான வழிக்காட்டல் கிடைக்கும்.

<u>செயற்பாடு :-</u>

உமது வாழ்வில் மாற்றம் அடையவேண்டிய பழக்கவழக்கங்களை அடையாளம் கண்டு, அவற்றை மாற்றுவதற்கு நீர் எடுக்கும் புதிய தீர்மானங்களைக் குறித்து அவற்றை கைவிட ஜெபம் ஒன்றை எழுதுக.

# இயேசுவின் திருப்பணியின் ஆரம்பம்
# (நாசரேத்து போதனை)

## இயேசுவின் பணியின் நோக்கத்தை வாழ்வுக்கு முன்மாதிரியாக கொள்ள வேண்டும்.

**(ஆண்டவர் இயேசுவின் முழுமையான வாழ்வினாலும் பணியினாலும் வாழ்வில் புத்தொளி பெறவேண்டும்.)**

**நாசரேத்து அறிக்கை - ஏசாயா 61:1-2**

இஸ்ரயேலர்கள் பாபிலோனியாவில் நாடுகடத்தப்பட்டு வாழ்ந்த போது அவர்களுக்கு அறிவிக்கப்பட்ட பகுதியாக (ஏசாயா 61:1-2) நம்பப்படுகின்றது. இது இன்று எமக்கும்/ஒடுக்கப்பட்டு வாழ்வோருக்கும் இப்பகுதியின் விடுதலைச் செய்தி பொருத்தமாகும்.

**இயேசுவின் பணி – லூக்கா 4:18-21**

| | | |
|---|---|---|
| ஏழைகளுக்கு | - | நற்செய்தியை அறிவித்தல். |
| சிறைப்பட்டோருக்கு (அடிமைகள்) | - | விடுதலை கிடைப்பதை அறிவித்தல். |
| பார்வையற்றோருக்கு | - | பார்வை கிடைப்பதை அறிவித்தல். |
| ஒடுக்கப்பட்டோருக்கு | - | விடுதலை கிடைப்பதை அறிவித்தல். |

ஆண்டவர் அருள் தரும் (அநுக்கிரக – The Year of the Lord’s Favour) வருடத்தை அறிவித்தல்.

இயேசு தம் ஊழியத்தை (பணியை) கலிலேயாவில் நாசரேத்து ஊரில் ஆரம்பித்த காலத்தில் பலஸ்தீனாவின் மக்கள் பொருளாதார, சமூக, அரசியல் மற்றும் சமய ரீதியில் பெரும் இன்னல்களை அனுபவித்துக் கொண்டு இருந்தனர். இயேசு போதித்த “இறையரசு” பற்றிய நற்செய்தி அக்காலத்தில் அவர்களுக்கு மாத்திரமல்ல எக்காலத்திலும் எல்லோருக்கும் பொருத்தமாகும்.

1. நாசரேத்து அறிக்கைக்கு எதிராக செயல்படுபவர்களுக்கு இயேசு கூறிய இரு சம்பவங்கள்.

   (i.) சாரி பாத் - விதவை (1 அரசர் 17:8-24)
   - எலியா

   (ii.) நாகமான் - தொழுநோயாளர் (2 அரசர் 5:1-24)
   - எலிசா

2. யூதனாகிய இயேசு தானுமே யூதர்களால் நிராகரிக்கப்பட்ட இறைவாக்கனர் என்பதை மக்கள் அறியச் செய்தார். இதற்காக யூதர்கள் மத்தியில் நிலவிய பின்வரும் இரு முதுமொழிகளை இயேசு சுட்டிக்காட்டினார்.

   ❖ "மருத்துவரே, உம்மையே நீர் குணமாக்கிக் கொள்ளும்." – லூக்கா 4:23
   ❖ "இறைவாக்கினர் எவரும் தம் சொந்த ஊரில் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை." – லூக்கா 4:24

3. தனது தைரியத்தின் மூலமும் புத்தி சாதுரியத்தின் மூலமும் பதில் கொடுத்தார். அவர்களை விட்டு பிரிந்து சென்றுவிடாது, அவர்கள் மத்தியில் தொழுகைக் கூடங்களிலும், வெளியிடங்களிலும் நின்று போதித்தார்

   இயேசுவில் ஆத்திரம் அடைந்தவர்கள் அவரை மலையிலிருந்து தள்ளி கொலை செய்ய இழுத்துச் சென்ற போது இயேசு அவர்கள் நடுவே நடந்து சென்று அங்கிருந்து போய்விட்டார்.

<u>செயற்பாடு :-</u>

இயேசுவின் நாசரேத்து அறிக்கை (ஏசாயா 61:1-2) மூலம் கிறிஸ்தவ திருச்சபையிலும் சமூகத்திலும் உமக்கு கிடைக்கும் பணியில் நீர் எதிர்நோக்கும் சவால்கள் மத்தியில் நீர் எவ்வாறு செயல்படுவீர் ?

# ஆண்டவர் இயேசுவின் முழுமையான வாழ்வினாலும் பணியினாலும் நாம் புத்தொளி பெறலாம்.

## இறை பணிக்கான அழைப்பு

### (இறை பணிக்கு தகுந்த மறுமொழி)

<u>கற்றல் பேறு :-</u>
- ★ இயேசு சீடர்களை அழைத்தல்.
- ★ இயேசுவின் பணியில் நாம் பங்குதாரர்.
- ★ ஆக்கபூர்வமாக இயேசுவின் பணியில் செயல்படல்.
- ★ இயேசு அழைக்கும் போது நாம் தகுந்த மறுமொழி காட்ட வேண்டும்.
- ★ ஒன்றிணைந்து பணிபுரிய வேண்டும்.

"எல்லாம் இயேசுவே" என்ற பாடலின் விளக்கம்.

**லூக்கா 5:1-11 திருப்பணியின் பரம்பலுக்காக முதல் சீடரை அழைத்தல்.**

"அஞ்சாதே, இது முதல் நீ மனிதரை பிடிப்பவன் ஆவாய்." - லூக்கா 5:10

இச் சம்பவத்தின் மூலம் சீமோன் பேதுருவைக் குறித்து நாம் அறிந்து கொள்ளக் கூடியது.

1. மீன் பிடித்தலில் பேதுரு அனுபவம் மிகுந்தவராய் இருந்தாலும் இயேசுவின் வேண்டுகோளுக்கு உடனடியாக செவிசாய்த்தார்.
2. இயேசுவின் பரிசுத்த தன்மையையும் இறைவல்லமையையும் இனம் கண்டதுடன் தனது பாவத்தன்மை (லூக்கா 5:8) யையும் உணர்ந்தார்.
3. தனது வாழ்வின் இலக்கை மாற்றி, இயேசு கொடுத்த புதிய இலக்கை ஏற்றுக்கொண்டார்.

**லூக்கா 6:12-16 பன்னிருவரைத் தேர்ந்தெடுத்தல்**

- ❖ திருத்தூதர் - "சிறப்பான பணிக்காக பயிற்றப்பட்டு அனுப்பப்பட்டவர்"
- ❖ இயேசு திருத்தூதர்களைத் தெரிவு செய்யு முன் (40 நாட்கள் உபவாசித்தார் – ஊழியம் தொடங்கு முன்) இரவு முழுவதும் ஜெபித்தார்.
- ❖ எவ்வித தராதரமும் பாராது சீடர்களைத் தமது பணிக்கு தெரிவு செய்தார்.

*குறிப்புதவி :- சீடர்களின் விபரம் - தரம் 10 புத்தகம், பக்கம் 36*

இயேசு இந்த பன்னிருவரைத் தவிர, வேறும் 72 சீடர்களைத் தெரிவு செய்து பணிக்கு அனுப்பினார். (லூக்கா 10:1-12). இவர்களைத் தவிர, வேறும் பல சீடர்கள் இயேசுவுக்கு இருந்தார்கள். (லூக்கா 8:1-3, 24:13)

இயேசு 12 சீடர்களையும் 70 சீடர்களையும் பணிக்கான அறிவுரைகளையும் அதிகாரத்தையும் கொடுத்து அனுப்பினார்.

*குறிப்புதவி :- தரம் 10 புத்தகம், பக்கம் 37*

இவ்விரு பயணங்களில் இருந்தும் நற்செய்தி பரப்பும் பணி தொடர்பாக நாம் கற்றுக்கொள்ளக்கூடியவை.

*குறிப்புதவி :- தரம் 10 புத்தகம், பக்கம் 38*

நற்செய்தி பயணங்களின் பலன் - லூக்கா 9:6, 10-17, 20

## தரம் 10 -பாடம் 9

# சமூகத்திற்கு புதிய எண்ணக் கருக்கள்

## (தராதரம் பாராது அனைவரையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.)

இறையரசை தனது பணியாக கொண்ட நம் ஆண்டவர் இயேசு, ஒடுக்கப்பட்டு, ஓரங்கட்டப்பட்டு மற்றும் நிராகரிக்கப்பட்டு வேதனைக்குள்ளான பலரின் வாழ்வை இயேசு மேம்படுத்தினார். அவ்வாறான இயேசுவின் பணியைக் குறித்து கற்போம்.

- ❖ இயேசுவின் காலத்தில் வாழ்ந்த பெண்கள், சிறுவர்கள்
- ❖ இயேசு பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் பெறுமதியை அளித்துள்ளார்.
- ❖ தராதரம் பாராது செயல்பட்டார்.
- ❖ எல்லோரையும் நேசித்து வாழ்ந்தார்.

(நாமும் மேற்குறிப்பிட்டவாறு செயல்பட வேண்டும்.)

லூக்கா 8:19-21 இயேசுவின் திருப்பணியில் புதிய சமூக எண்ணக் கருக்கள் - **குடும்பம்**

## பெண்கள்

லூக்கா 8:1-3
- ★ பொல்லாத ஆவிகளினின்றும் நோய்களினின்றும் குணமான பெண்கள்
- ★ ஏழு பேய்கள் நீங்கப்பெற்ற மகதலா மரியாள்.
- ★ ஏரோதுவின் மாளிகை மேற்பார்வையாளர் கூசாவின் மனைவி யோவன்னா
- ★ மேலும் பல பெண்கள்.

லூக்கா 10:38-42
- ★ மார்த்தா
- ★ மரியா

லூக்கா 7:36-50
- ★ நறுமணத் தைலம் பூசிய பெண்

லூக்கா 8:43-48
- ★ 12 ஆண்டுகளாய் இரத்தப் போக்கினால் வருந்திய பெண்
- ★ தொழுகை கூட தலைவரின் மகள் உயிர்த்தெழுதல்.

லூக்கா 13:10-17
- ★ 18 வருடமாக கூன் விழுந்த பெண்

(நீண்ட காலமாக சுகம் இல்லாது இருந்தபடியால் சமூகத்தில் புறந் தள்ளப்பட்டிருந்தார்கள்.)

லூக்கா 19:1-10
- ★ சக்கேயுவின் மனமாற்றம் - மக்களால் வெறுக்கப்பட்டவர்.

லூக்கா 5:12-16
- ★ தொழுநோயாளரின் நோயை நீக்குதல். – மக்களால் ஒதுக்கப்பட்டவர்.

லூக்கா 9:46-48 ★ யார் மிகப் பெரியவர் என்ற கேள்விக்கு விடையாக சிறு பிள்ளையை நிறுத்துதல்.

லூக்கா 18:15-17 ★ சிறு பிள்ளைகளுக்கு ஆசி வழங்குதல்.

லூக்கா 17:1-2 ★ இயேசுவின் அறிவுரைகள் - எந்திரக் கல்லை கட்டி கடலில் தள்ளிவிடுவது.

கிறிஸ்தவ வாழ்வு (குடும்பம்) என்பது இறையரசின் குணவியல்புகளை நடைமுறைப் படுத்துதுகின்ற செயல்பாட்டுடனான நம்பிக்கை ஆகும்.

யாக்கோபு 1:22

**அசிசியூர் பிரான்சிஸ் அவர்களின்**
**சமாதான மன்றாடல்**

உம் சாந்தியின் கருவியாக
என்னை ஆக்கியருளும்
எங்கு பகை உள்ளதோ
அங்கு மன்னிப்பையும்
எங்கு கலகம் உள்ளதோ
அங்கு சாந்தியையும்
எங்கு ஐயமுள்ளதோ
அங்கு நம்பிக்கையையும்
எங்கு இருள் உள்ளதோ
அங்கு ஒளியையும்
எங்கு துன்பம் உள்ளதோ
அங்கு இன்பத்தையும்
நாம் பரப்பிட அருள் தாரும்.
என்னை மற்றோர் புரிந்துக் கொள்ள
வேண்டுமென்று துடிப்பதை விடுத்து
ஏனையோரை நான் புரிந்து கொள்ள
விளைவேனாக.
என்னை மற்றவர்கள் நேசிக்க வேண்டுமென்று
தவிப்பதை விடுத்து
மற்றவர்களை நேசிக்க முற்படுவேனாக.
ஏனெனில் கொடுப்பதன் மூலம் தான்
நான் மன்னிப்பை பெறுவேன்.
மடிவதன் மூலம் தான் நீர் தரும்
முடிவில்லா வாழ்வுக்குள் பிரவேசிப்பேன்.

சிந்தி, செய்லபடு.

**கொழும்பு மறைமாவட்ட, இலங்கைத் திருச்சபை கிறிஸ்தவ கல்விமன்றத்தால் தயாரிக்கப்பட்டது**

# ஆண்டவர் இயேசுவின் முழுமையான வாழ்வினாலும் பணியினாலும் வாழ்வில் புத்தொளி பெறலாம்.

## திருச்சட்டத்தின் மையம் அன்பு

<u>கற்றல் பேறு :-</u>

- யூத சமூகத்தில் இயேசுவுக்கு ஏற்பட்ட சவால்கள்.
- இயேசு சோதனைகளுக்கு ஏற்ற மறுமொழி காட்டினார்.
- விமர்சனம் செய்தலும், விமர்சனத்துக்கு உட்படுத்தலும் இன்று சமூகத்தில் இடம் பெற்று வருகின்றன.
- நல் மனப்பான்மை, உரையாடல்களால் மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

| | |
|---|---|
| லூக்கா 5:17-26 | முடக்குவாதமுற்றவரை குணப்படுத்தல். |
| லூக்கா 5:27-32 | லேவியை அழைத்தல். |
| லூக்கா 5:33-39 | நோன்பு பற்றிய கேள்வி. |
| லூக்கா 6:1-5 | ஓய்வுநாளை கடைப்பிடித்தல் பற்றிய விளக்கம். |
| லூக்கா 14:1-6 | ஓய்வுநாளில் நீர்க்கோவை நோயாளி குணமடைதல். |
| லூக்கா 6:6-11 | கை சூம்பியவர் ஓய்வுநாளில் நலமடைதல். |
| லூக்கா 11:37-54 | பரிசேயர் மறைநூல் அறிஞர் கண்டிக்கப்படல். |
| லூக்கா 16:14-17 | திருச்சட்டமும் இறையாட்சியும் |
| லூக்கா 17:20-21 | இறையாட்சி வருதல். |

- கிறிஸ்தவ வாழ்வின் நன்மைக்காக இயேசுவுக்கும் பரிசேயருக்கும் மறைநூல் அறிஞர்களுக்கும் நடந்த உரையாடலின் மூலம் **எமது வாழ்வில் சேர்த்துக்கொள்ளக்கூடிய குணாதிசயங்களின்** சாராம்சம்.
- இறைவார்த்தையை வார்த்தையாக மட்டுமல்ல அர்த்தமுள்ளதாக கருத்திற் கொள்ள வேண்டும்.
- உலகத்திற்கு வெளிப்படுவதுபோல வெளிப்படையான பாரம்பரியங்களால் அல்ல. எமது உள்ளத்தில் ஆண்மீக ரீதியாக செயற்பட வேண்டும்.
- இறையரசின் செய்தியானது அன்பின் அடிப்படையாகும்.
- தாழ்மையாக செயற்படுவது கிறிஸ்தவ வாழ்வில் தொடர்ந்து வெளிப்பட வேண்டும்.
- கடவுளுக்கும் உலக செல்வத்திற்கும் ஒரே முறையில் பணி செய்யமுடியாது.
- நாம் தவிர்க்க வேண்டியது பாவத்தை மட்டுமே, பாவியை அல்ல.
- இறையரசின் பெறுமதியை எமக்குள்ளும் எம்மிடையேயும் கட்டி எழுப்ப வேண்டும்.

# இயேசுவின் பணிகளுக்கு சவால் விடுத்த சதுசேயர்

# சவால்களின் மத்தியில் பணி

இப்பாடத்தில் இயேசுவுக்கு அக்காலத்தில் சதுசேயரின் சவால்களையும் இயேசுவின் மறுமொழியையும் அதனால் நாம் கற்றுக்கொள்ளும் முன்னுதாரணங்களையும் கற்போம்.

<u>சதுசேயர் (சதோக்கைப் பின்பற்றுவோர்)</u>

பொதுவாக இவர்கள் ஆசாரியக் கூட்டத்தார். இவர்களுடைய பெயர் தாவீதின் நாட்களில் பிரதான ஆசாரியனாயிருந்த சாதோக்கு என்பவரிடமிருந்து வந்தது. பிரதான ஆசாரியர்கள் எல்லாரும் மிகுதியாய் சதுசேயராய் இருந்தார்கள்.

துலகத்தில் இவர்கள் யூதருடைய காரியங்களை உற்சாகத்தோடு நடத்தி வந்தார்கள். இயேசுவின் நாட்களில் இவர்கள் தங்கள் சொந்த நன்மையைத் தேடினது மட்டுமன்றி ராஜாங்க விஷயங்களிலும் தலையிட்டார்கள். இதினிமித்தம் ஜனங்கள் அவர்களை அதிகமாய் நம்பவில்லை.

<u>இவர்களுடைய விசேஷ கொள்கையாவன :-</u>

1. எழுதப்பட்ட நீதிச்சட்டமே கைக்கொள்ளப்பட வேண்டும். மறைநூல் அறிஞர்களால் நீதிச்சட்டம் எழுதப்பட்டது.
2. மனுஷர் மரித்த பின் சரீர உயிர்த்தெழுதல் இல்லை.
3. தேவதூதனும் ஆவியும் இல்லை.
4. திருமுழுக்கு யோவானின் போதனைகளில் மக்கள் நம்பிக்கை கொண்டிருப்பதை சதுசேயர் அறிந்திருந்தாலும், அவர்கள் அவரின் போதனைகளை கேட்பதற்கு ஆயத்தமாக இருக்கவில்லை.

லூக்கா 20:1-8 இயேசுவின் அதிகாரத்திற்கு சவால்.
(இயேசுவின் அதிகாரத்திற்கு சவாலாக சதுசேயர் வினவுதல்.)

லூக்கா 20:9-18 கொடிய குத்தகைக்காரர் உவமை.
(திராட்சைத்தோட்ட குத்தகைகாரர் உவமை.)

லூக்கா 20:19-26 சீசருக்கு வரி செலுத்துதல்.

லூக்கா 20:27-40 உயிர்த்தெழுதல் பற்றிய கேள்வி.

இயேசு தமது பணியின்போது ஏற்பட்ட சவால்களைப் போன்று அவரைப் பின்பற்றும் எங்களுக்கும் அவ்வாறான சவால்களை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படும்.

- ❖ உண்மையான வினாக்கள் மற்றும் உண்மையற்ற வினாக்களையும் தவறின்றி அறிந்து பொருத்தமான மறுமொழி அளித்தல்.
- ❖ கபடமற்றவர்கள் போன்று நடிக்கும் கபடமுள்ள நபர்களிடம் கவனமாக இருத்தல்.
- ❖ எமது விசுவாசத்தை சவாலுக்கு உட்படுத்துவதற்காக உருவாக்கப்படும் வினாக்களை எம்மிடம் வினவும் போது கவனமாயிருத்தல்.
- ❖ இயேசு எமது இறைவன் என்பதை விசுவாசித்து அனைத்து சவால்களையும் எதிர்நோக்கி பணி செய்யவேண்டும்.

<u>செயற்பாடு :-</u>

எமது விசுவாசம் தளர்ந்து போகும் சந்தர்ப்பங்கள் மூன்றை சுருக்கமாக எழுதி ஜெபம் ஒன்றை எழுதுக.

## தரம் 10 - பாடம் 12

# சவால்களின் மத்தியில் அமைதி

## சமூக சவால்களின் மத்தியில் சகோதர நல்லிணக்கத்துடன் செயல்பட வேண்டும்.

<u>கற்றல் பேறு :-</u>

- ❖ இயேசுவின் துன்புறுத்தலின் முன்நிகழ்வுகள்.
- ❖ இயேசுவை அரசனாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.
- ❖ இயேசுவின் உடலுக்கும் இரத்தத்திற்கும் நாம் பங்குதாரர் மட்டுமன்றி எமக்காக பலியிடப்பட்டது என்பதை நாம் விசுவாசிக்க வேண்டும்.
- ❖ இயேசுவின் வாழ்வின் முன்மாதிரிகளுடன் நாம் செயற்பட வேண்டும்.

**லூக்கா 19:28-48 எருசலேம் பணி**

வெற்றி ஆர்ப்பரிப்போடு இயேசு எருசலேமில் நுழைதல்.

<u>இந் நிகழ்வில் இரு பிரிவினரால் ஏற்பட்ட சவால்கள்</u>

1. <u>மக்களால் ஏற்பட்ட சவால்கள்</u>

   மக்களின் விடுதலைக்காக வருவார் என எதிர்ப்பார்க்கப்பட்ட "மெசியா" இயேசு என அறிந்து அவரை மக்கள் மகிழ்ச்சி ஆரவாரத்தோடு அழைத்து வந்தனர்.

2. <u>யூத மதத் தலைவர்களால் ஏற்பட்ட சவால்</u>

   இயேசுவின் வாழ்க்கை, போதனைகளின் விளைவாக யூத மதத் தலைவர்கள் தமது அதிகாரத்துக்கும் மேலான அதிகாரம் கொண்ட ஒருவர் வந்துவிட்டாரா என சந்தேகப்பட்டனர்.

**லூக்கா 19:45-48 இயேசு கோவிலைத் தூய்மையாக்குதல்.**

- ❖ எமது இறை இல்லம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு இந் நிகழ்வு முன்னுதாரணமாகும்

**லூக்கா 22:1-6 இயேசுவைக் கொலை செய்ய சதித்திட்டம்.**

யூதாஸ் இயேசுவைக் காட்டிக் கொடுப்பதற்கான காரணம் என்ன ? பணத்தின் மீது ஏற்பட்ட ஆசை காரணமா ? லூக்கா 22:22. "மானிட மகன் தமக்கென்று குறிக்கப்பட்டபடியே போகிறார். ஆனால் ஐயோ! அவரைக் காட்டிக் கொடுக்கிறவனுக்கு கேடு." என்றார்.

**லூக்கா 22:14-23 ஆண்டவரின் இறுதி திருவிருந்து.**

இறைவனால் இஸ்ரயேல் மக்கள் எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து மீட்டதற்காக நன்றி செலுத்தும் தினமாகும்.

**லூக்கா 22:7-13 பாஸ்கா விருந்துக்கு ஏற்பாடு செய்தல்.**

1வது இயேசுவால் நடாத்தப்பட்ட பாரம்பரிய சமூக பழக்க வழக்கங்களுக்காக உதவி புரிந்தன.

2வது தமது சகோதர சீடர்களுடனான சகோதரத்துவத்தையும் ஒத்துழைப்பையும் காட்டும் முன்மாதிரி.

3வது ஆண்டவரின் இறையரசு பற்றி இதுவரை இடம்பெற்ற இறைபோதனை இந்த செயல் நிகழ்வால் உள்ளடக்கப்படுகின்றது.

- ❖ இன்னும் நாமும் இவ்வடையாளங்களை/சம்பிரதாயங்களை கடைப்பிடிக்கின்றோம்.

# கெத்சமனி வேண்டுதலின் வல்லமை
## இறை வேண்டுதலில் இறை சித்தத்தை நிறைவேற்ற வேண்டும்.

<u>கற்றல் பேறு :-</u>

- ஒலிவ மலை நிகழ்வுகள்.
- இறை விருப்புக்கு இயேசு இணங்கினார்.
- எப்போதும் இறை விருப்புக்கு கீழ்ப்படிய வேண்டும்.
- இறை விருப்புக்கேற்ப இணைந்து வாழ வேண்டும்.

**லூக்கா 22:39-46 இயேசு ஒலிவ மலையில் இறைவனிடம் வேண்டுகின்றார்.**

- தன் வாழ்க்கைப் பயணத்தில் அனுபவிக்க நியமிக்கப்பட்டிருந்த சவாலை இயேசு அறிந்திருந்தார்.
- பசி, தாகம், துன்பம், சந்தோஷம் போன்று மரண வேதனையையும் அனுபவித்தார்.
- இத் துன்பத்தை நீக்கிவிடுமாறு மிகவும் உருக்கமாய் இறை வேண்டல் செய்தார். - 22:42
- சோதனைக்கு உட்படாதிருக்க இறைவனிடம் வேண்டுங்கள். – 22:40

(பாவத்தின் விளைவு பிரிவு. கிறிஸ்து பாவம் சுமந்தவராக மட்டுமல்ல. பாவமாகவே மாற்றப்பட்ட போது இறைவனால் (தேவனால்) எப்படி தொடர்ந்து ஐக்கியம் கொள்ள முடியும். மாற்கு 15:34. "என் இறைவா, என் இறைவா ஏன் என்னைக் கைவிட்டீர்." என்ற கதறலின் காரணம் இதுவே.)

**லூக்கா 22:47-53 இயேசுவைக் காட்டிக் கொடுத்தலும் கைது செய்தலும்.**

இச் சந்தர்ப்பத்தில் இயேசு யூதாசுக்கு காண்பித்த வார்த்தை குற்றச்சாட்டு அல்ல, மாறாக சோகத்தின் வெளிப்பாடாகும். பாவியை அல்ல பாவத்தை நிராகரித்தார்.

தரம் 10 - பாடம் 14

# தீர்ப்பும் சிலுவை மரணமும்

## அநீதிகளின் முன்னிலையில் அசையாது வாழ வேண்டும்.

கற்றல் பேறு :-

- இயேசு தீர்ப்புக்குள்ளாக்கப்பட்ட சந்தர்ப்பங்கள்.
- இயேசு எமக்காக சிலுவையில் அறையப்பட்டார்.
- சுயலாபத்திற்காக தவறு செய்யாதிருக்க வேண்டும்.
- நீதியாக/நீதிக்காக வாழ்வதற்கு எம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

கலந்துரையாடலில் பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தல்.

- எந்தவொரு நாட்டுக்கும் சட்டதிட்டங்கள் உள்ளன.
- தவறிழைப்பவர்களுக்கு தண்டனை கிடைக்கும்.
- உயர் நீதி மன்றம் சட்டத்தை செயற்படுத்தும் அமைப்பாகும்.
- குற்றமற்றவர்களும் குற்றவாளிகளாக கணிப்பிடப்படுவார்கள்.
- பலமுள்ளவர்களால் அநீதியான தீர்ப்பு வழங்க முடியும்.

| | |
|---|---|
| லூக்கா 22:63-65 | இயேசுவை ஏளனம் செய்தல். |
| லூக்கா 22:66-71 | தலைமைச் சங்கத்தின் முன்னிலையில் இயேசு. |
| லூக்கா 23:1-5 | இயேசுவைப் பிலாத்திடம் கொண்டு செல்லுதல். |
| லூக்கா 23:6-12 | ஏரோது முன்னிலையில் இயேசு. |
| லூக்கா 23:13-25 | இயேசுவுக்கு மரண தண்டனை விதித்தல். |
| லூக்கா 23:33 | வலதுபுறம் ஒருவனும் இடதுபுறம் ஒருவனுமாக இரு குற்றவாளிகளுக்கு மத்தியில் இயேசுவை சிலுவையில் அறைந்தார்கள். |
| **லூக்கா 23:44-49** | **இயேசுவின் மரணம்.** |

- நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை நாடெங்கும் இருள்.
- திருக்கோவிலில் திரைச்சீலை இரண்டாக கிழிந்தது.
- இயேசு அதிக உரத்த சத்தத்துடன் “பிதாவே, உமது கரங்களில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்.” என்று கூறினார்.
- நூற்றுத்தலைவரின் சாட்சி :- “இவர் உண்மையாகவே நேர்மையாளர்.” என்று கூறி கடவுளை போற்றி புகழ்ந்தார்.

அநீதிக்கு முன்னால் மனம் தளராது வாழ்வதற்கு இயேசு எமக்கு முன்னுதாரணமாக செயல்பட்டார். இதற்காக தனது உயிரையும் தியாகம் செய்தார். **வீழ்ச்சியின் அபாயம் (Fall Risk)**

1 கொரிந்தியர் 10:12

தாம் நிலையாக நிற்பதாக நினைத்துக் கொண்டிருப்பவர் விழுந்து விடாதபடி பார்த்துக் கொள்ளட்டும்.

**1 Corinthians 10:12**

If you think you are standing firm, be careful that you don’t fall!

**கொழும்பு மறைமாவட்ட, இலங்கைத் திருச்சபை கிறிஸ்தவ கல்விமன்றத்தால் தயாரிக்கப்பட்டது**

# துன்புறலும் பிரதிநடத்தையும்

## மனச்சான்றுக்கு இணங்க கிறிஸ்தவ வாழ்வுக்கு சான்று பகர வேண்டும்.

<u>கற்றல் பேறு :-</u>

- ❖ இயேசுவின் துன்ப நிகழ்வில் பங்கேற்றவர்கள்.
- ❖ இயேசு கிறிஸ்து இறை மைந்தன்.
- ❖ மனச்சான்றுக்கு இணங்க செயல்பட வேண்டும்.
- ❖ கிறிஸ்தவ சாட்சியாளர்களாக வாழ வேண்டும்.
- ❖ சிலுவையில் அறையப்பட கல்வாரியின் கொல்கொதாவுக்கு இயேசு கொண்டு செல்லப்பட்டார்.
- ❖ இயேசுவின் முதன்மையான சீடன் பேதுரு.
- ❖ பேதுருவின் மூலம் இயேசு, கிறிஸ்துவாக அறிமுகம் செய்யப்பட்டார்.
- ❖ நாம் கிறிஸ்தவ சாட்சியாளர்களாக வேண்டும்.

பாடம் :-

**லூக்கா 23:34, 42, 46 இயேசு சிலுவையில் அறையப்படுதல்.**

<u>இயேசுவின் துன்ப நிகழ்வில் பங்கேற்றவர்கள்</u>

★ பேதுரு – லூக்கா 9:18-20 பேதுருவின் அறிக்கை (நீர் கடவுளின் மெசியா)
லூக்கா 22:31-34, 22:54-62 பேதுரு மறுதலித்தல்.

★ சிரேனே ஊர் சீமோன் - லூக்கா 23:26

★ பெண்கள் - லூக்கா 23:27-31

★ குற்றவாளிகள் - லூக்கா 23:32-33, 39-42

★ காவற் படைவீரர் - லூக்கா 23:35-38

★ அரிமத்தியா யோசேப்பு - லூக்கா 23:50-53

- ❖ நாமும் கிறிஸ்துவுக்காக சான்று பகர வேண்டும்.

<u>இப் பாடத்தின் மூலம் கிறிஸ்தவ வாழ்வுக்கு, நமக்கு தரப்படும் செய்தி.</u>

- இடைவிடாமல் ஜெபிப்பது.
- எமது நம்பிக்கையை முன்னெடுத்துச் செல்ல இயேசுவின் துணை இல்லாமல் எமக்கு தனியாக எதுவும் செய்ய முடியாது.
- இறையரசின் மிகவும் முக்கிய பொறுப்பையும் காரியங்களையும் இயேசு எம்மிடம் ஒப்படைத்துள்ளார்.
- நாம் சோதனையில் வீழ்ந்தாலும் மீண்டும் சரியாக செயற்பட அவர் எமக்கு வழி காட்டுவார்.
- நாம் நினையாத நேரத்தில் (உதாரணம் :- சிரேனே ஊர் சீமோன்) இறையரசின் பணிக்கு அழைப்பு கிடைக்கும் போது அதை அசட்டை செய்யாது செய்ய ஆயத்தமாக இருக்க வேண்டும்.
- "எனக்காக அழ வேண்டாம் மாறாக உங்களுக்காகவும் உங்கள் மக்களுக்காகவும் அழுங்கள்." (சிலுவை மரணம் தோல்வியல்ல வெற்றி.)
- வாழ்வின் இறுதி வேளையிலும் தனது தவறை (உதாரணம் :- சிலுவையில் அறையப்பட்ட இரு கள்வர்களில் ஒருவன்.) உணர்ந்து மனம் திரும்பி மன்னிப்பை பெற்றுக்கொள்ள வேண்டும்.
- எமது வாழ்வில் நாம் முகம் கொடுக்கும் வேதனைகளின் போது (உதாரணம் :- படைவீரர் இயேசுவை நகைத்தனர். - "நீ யூதர்களின் அரசனானால் உன்னைக் காப்பாற்றிக் கொள்.") இறை வார்த்தைகளினால் (இயேசுவின் 3 சோதனைகளின் போது) பெலனடைந்து அதற்கு தைரியமாக முகம் கொடுப்பது அவசியமாகும்.
- இயேசுவின் உடலை மரியாதையோடு கல்லறையில் அடக்கம் செய்வதற்கு கேட்டது, அரிமத்தியா யோசேப்பின் தைரியமும் அர்ப்பணிப்புமாகும். இவ்வாறே நாமும் எச்சந்தர்ப்பத்திலும் தைரியத்துடனும், அர்ப்பணிப்புடனும் கிறிஸ்துவுக்காக சேவை செய்ய வேண்டும்.

<u>செயற்பாடு :-</u>

1. இன்று பல சவால்களையும் எதிர்நோக்கும் கிறிஸ்தவர்களாகிய நாம் இயேசுவின் சிலுவை மரணத்திலிருந்து பெறக்கூடிய வழிநடத்தல் என்ன ?
    - எங்களுக்கு துன்பம் ஏற்படுத்தப்படும் போது அவற்றை ஏற்றுக்கொண்டு துன்பம் இளைத்தவரை நல்வழிப்படுத்தல்.
    - கிறிஸ்துவின் மூலமாக மீட்பை அடைய முடியும் என புரிந்து கொள்ளுதல்.
    - அவரோடு நேரடியாகத் தொடர்பு கொள்ளலாம்.
    - குற்றங்களை அறிக்கை செய்வதன் மூலம் இறுதி வேளையிலும் மீட்பைப் பெற்றுக்கொள்ளலாம்.

தரம் 10 - பாடம் 16

# வாழும் இறைவனுக்குள் வெற்றி வாழ்வு
## புதிய எதிர்பார்ப்பு
### இயேசு உயிர்பெற்று எழுதலும் விண்ணேற்றம் அடைதலும்

<u>கற்றல் பேறு :-</u>

- ❖ இயேசுவின் உயிர்ப்பை அனுபவித்தவர்கள்.
- ❖ இயேசு மரணத்தை வென்று உயிர்த்தெழுந்தார்.
- ❖ இயேசு உயிருள்ள ஆண்டவர் என்பதை நாம் மனப்பூர்வமாக விசுவாசிக்க வேண்டும்.
- ❖ புதிய எதிர்நோக்கோடு வெற்றிகரமாக செயற்பட வேண்டும்.

**இயேசு உயிர்பெற்று எழுந்து வெவ்வேறு நபர்களுக்கு காட்சியளித்தல்.**

- ❖ லூக்கா 24:1-12 - பெண்கள்
- ❖ லூக்கா 24:13-53 - எம்மாவு பயணம்
- ❖ லூக்கா 24:36-53 - சீடர்களுக்கு
- ❖ அவர் எம்மோடும் இருக்கிறார்.
- ❖ இயேசுவின் உயிர்ப்பினால் எமக்கு புதிய எதிர்நோக்கு உண்டாகின்றது.
- ❖ உயிர்த்த ஆண்டவரை தனிப்பட்ட அனுபவத்தில்.

| பாடம் 18 | | | | | | லூக்கா 24: 1-53 | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 எ | ★ | ★ | ★ | ★ | 2 சீ | ★ | 3 அ | 4 கு | 5 தி | ★ | 6 த |
| ம் | ★ | ★ | ★ | ★ | மோ | ★ | றி | ழ | ரு | ★ | லை |
| 7 மா | னி | ட | ம | 8 க | ன் | ★ | வி | ப் | த் | ★ | கு |
| வு | ★ | ★ | ★ | ல் | ★ | ★ | லி | ப | தூ | 9 ப | னி |
| ★ | ★ | ★ | ★ | ல | ★ | 10 மூ | க | மு | த | தி | ந் |
| 11 கி | ★ | ல் | நூ | றை | 12 ம | ன் | ளே | ற் | ர் | னொ | து |
| லி | ★ | ★ | ★ | ★ | ★ | றா | ★ | றா | 13 க | ரு | 14 வி |
| யோ | ★ | 15 ஒ | ளி | வீ | சு | ம் | ஆ | டை | ள் | 16 வ | டி |
| ப் | ★ | ★ | ★ | 17 க | ★ | நா | ★ | ★ | 18 சி | ர் | ய |
| பா | ★ | ★ | 19 பெ | ண் | க | ள் | ★ | ★ | லு | ★ | ந் |
| ★ | ★ | ★ | ★ | 20 க | லி | லே | யா | ★ | வை | ★ | கா |
| 21 மு | த | ல் | நா | ள் | 22 நா | ச | ரே | த் | து | 23 மா | லை |

**கொழும்பு மறைமாவட்ட, இலங்கைத் திருச்சபை கிறிஸ்தவ கல்விமன்றத்தால் தயாரிக்கப்பட்டது**

## லூக்கா 24:1-53

**மேலிருந்து கீழ்**

1. எருசலேமிலிருந்து ஏறத்தாழ பதினொரு கிலோமீற்றர் தொலைவிலுள்ள ஊர்.
2. உண்மையாகவே உயிருடன் எழுப்பப்பட்டவர் இவருக்கு தோற்றம் அளித்தார்.
3. எம்மாவு சென்ற சீடரை இயேசு இவ்வாறு அழைத்தார்.
4. இயேசு இல்லை, அதனால் கடைசியும் இல்லை.
5. மகதலா மரியா, யோவன்னா, யாக்கோபின் தாய் மரியா ஆகியோர் இவர்களிடம் இயேசு உயிர்த்ததை கூறினர்.
6. அச்சமுற்றதினால் இப்படி நின்றார்கள்.
8. இங்கு கல் புரட்டப்பட்டிருந்தது.
9. எருசலேமில் கூடியிருந்த சீடர்கள்.
10. இயேசு உயிர்த்தெழுந்தது.
11. உமக்கு மட்டும்தான் தெரியாது என்றவர்.
14. பெண்களுள் சிலர் கல்லறைக்கு சென்ற நேரம்.
17. எம்மாவுக்கு சென்றவர்களுக்கு மறைக்கப்பட்டிருந்தது.
18. இயேசு இதில் அறையப்பட்டார்.

**வலமிருந்து இடம்**

12. எதை விளக்கும் போது எம்மாவு வழியில் சென்ற சீடருக்கு உள்ளம் பற்றி எரிந்தது.

**இடமிருந்து வலம்**

7. பாவிகளின் கையில் ஒப்படைக்கப்பட்டவர்.
13. நாம் ஆண்டவர் கரத்தில் இருக்கும் ஒரு __________ .
15. பெண்கள் முன் தோன்றியவர்களின் உடை.
16. இயேசுவின் இரத்தம் என் பாவங்களை கழுவ __ __ ந்தது.
19. உயிர்த்த ஆண்டவரை முதன் முதலில் கண்டவர்கள்.
20. இங்கு சொன்னதை நினைவுப்படுத்திக் கொள்ளுங்கள்.
21. நறுமணத்தோடு கல்லறைக்கு சென்ற நாள்.
22. இயேசு இந்த ஊரைச் சேர்ந்தவர்.
23. ஏன் எம்மாவு வழியில் சென்ற சீடர்கள் இயேசுவை தங்களுடன் தங்குமாறு கூறினர்.

# தூய ஆவியானவரால் துணிவும் சக்தியும் பெற்று புது வாழ்வின் அனுபவத்தைப் பெற வேண்டும். தூய ஆவியானவரின் துனையால் இறைபணிக்கு அர்ப்பணிக்க வேண்டும். தூய ஆவியின் அருள்

- ❖ திருமுழுக்கின் மூலம் தூய ஆவியானவரின் பிரசன்னத்தால் தைரியத்தையும் பெலத்தையும் பெற்று தமது வாழ்வில் ஒரு புதிய மாற்றத்தை அனுபவிக்கலாம்.

**லூக்கா 3:21-22 - இயேசு திருமுழுக்குப் பெறுதல்.**

- ❖ இயேசு தமது தூதுப்பணிக்கு ஆயத்தமானார். அதற்காக அவர் கலிலேயாவிலுள்ள நாசரேத்தில் இருந்து யூதேயாவின் யோர்தான் நதி அருகில் வந்தார்.
- ❖ திருமுழுக்கு யோவானின் முன்தூதுப் பணியை அங்கீகரித்தார்.
- ❖ திருமுழுக்கு பெற்றதன் மூலம் தாழ்மையின் குணாதிசயத்தை வெளிக்காட்டினார்.
- ❖ திருமுழுக்கு யோவானின் பணிக்கும் தனது பணிக்கும் இடையெ இருக்கும் தொடர்பை வெளிப்படுத்தினார்.
- ❖ புதுமை நிகழ்வுகளாக வானம் திறக்கப்பட்டது.
- ❖ தூய ஆவியானவர் புறாவின் வடிவில் வந்து இறங்கினார்.
- ❖ இறை வெளிபாடு :- “என் அன்பார்ந்த மகன் நீயெ, உன் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்.” – லூக்கா 3:22
- ❖ திருமுழுக்கைப் பெற்ற கிறிஸ்தவரான நாம் ஜெபத்தின் மூலம் இறைத்தொடர்பை வளர்த்துக்கொள்வது அவசியமாகும்.
- ❖ இயேசுவின் திருமுழுக்கின் வேளையில் தூய ஆவியானவர் இறங்கினார்.
- ❖ எமது வாழ்விலும் தூய ஆவியானவரின் பிரசன்னம் நிலவும்.
- ❖ தண்ணீர் வெளி வாழ்வை தூய்மைப்படுத்துவதோடு தூய ஆவியானவர் எமது உள்ளத்தை தூய்மையாக்கி வாழ்நாட்கள் முழுவதும் அருள் பொழிவு செய்கிறார்.
- ❖ ஏசாயா 30:21, யோவான் 14:26, கலாத்தியர் 3:26-27

தரம் 10 - பாடம் 18

# சோதனைகளில் வெற்றி பெற


# தூய ஆவியின் வழிகாட்டலை பெற வேண்டும்.

## சோதனையில் வெற்றி

**லூக்கா 4:1-13 - இயேசுவுக்கு ஏற்பட்ட சோதனைகள்**

| | | |
|---|---|---|
| லூக்கா 4:3 | முதலாம் சோதனை – பதில் | இணைச்சட்டம் 8:3 |
| லூக்கா 4:5-7 | இரண்டாம் சோதனை (உயர்ந்த இடம்) - பதில் | இணைச்சட்டம் 6:13 |
| லூக்கா 4:9-11 | மூன்றாம் சோதனை | |
| | அலகை இயேசுவைக் குழப்ப | திருப்பாடல் 91:11-12 |
| | இயேசுவின் பதில் | இணைச்சட்டம் 6:16 |

நமக்கு வரும் சோதனை உதாரணம் 1 தீமோத்தேயு 5:23 பதில் நீதிமொழிகள் 23:30-32 இறவைார்த்தையைக் கற்று அதில் நிலைத்திருந்தால் நாம் இயேசுவில் நிலைத்திருப்போம்.




<u>செயற்பாடு :-</u>

கிறிஸ்தவ மாணவராகிய நீர், உமக்கு ஏற்படும் சோதனைகள் எவை ? அவற்றை நீர் எவ்வாறு மேற்கொள்வீர் ?

# தெளிவான தோற்றத்துடன் வாழ்வை உருவமைத்துக் கொள்ள வேண்டும்

## சிறந்த நோக்கமும் புது வாழ்வும்

**லூக்கா 9:28-36 - இயேசுவின் தோற்றம் மாறுதல்**

இந்த சந்தர்பத்தில் வெளிப்படுத்தப்பட்ட விசேட நிகழ்வுகள்.

- ❖ இயேசு ஒரு மலையில் ஏறி ஜெபம் செய்து கொண்டு இருக்கும் போது
- ❖ இயேசுவின் வஸ்திரங்கள்
- ❖ அவருடைய இருபுறமும்
- ❖ மோசேயும் எலியாவும் இயேசுவுடன் கலந்துரையாடல்
- ❖ தூக்கத்துடன் இருந்த சீடர்கள் விழித்துக் கொண்டனர்.
- ❖ மோசேயும் எலியாவும் காணப்பட்டதன் நோக்கம்
- ❖ சீடர்கள் மூலம் (பேதுரு, யாக்கோபு, யோவான்)

- ❖ அவருடைய முகத்தோற்றம் மாறியது
- ❖ வெண்மையாகி பிரகாசித்தது
- ❖ மோசேயும் எலியாவும் மகிமையுடன் காணப்பட்டனர்.
- ❖ எருசலேமில் நிறைவேற்றப்போகும் அவரின் மரணத்தைக் குறித்துப் பேசினர்.
- ❖ இயேசு மகிமையுடன் இருப்பதையும் அவருடன் இருவர் இருப்பதையும் கண்டார்கள்.
- ❖ நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனமும் கிறிஸ்துவுக்குள் நிறைவேற்றப்பட்டது என்பதன் அடையாளம்.
- ❖ சரியாக விளங்கிக் கொள்ளுதல்.

<u>செயற்பாடு :-</u>

1. இயேசுவின் தோற்றம் மாறுதலை பார்த்த சீடர்கள் உணர்ந்து கொண்டது இயேசுவின்
   1) துன்புறுத்தல் பற்றி
   2) விசாரணைப் பற்றி
   3) அன்பைப் பற்றி
   4) <u>இறை சுபாவம் பற்றி</u>
2. இயேசு தோற்றம் மாறும்போது அங்கு யார் யார் இருந்தனர்?

   பேதுரு, யோவான், யாக்கோபு.
3. இயேசு தோற்றம் மாறும் போது அங்கு தோன்றியது எத்தனை பேர்? அவர்கள் யார்? 2 பேர். மோசே, எலியா.
4. யூதர்களின் நம்பிக்கையில் அஸ்திவாரமாக காணப்படுவது எவை?

   நீதிச்சட்டமும், இறைவாக்கும்.
5. மறுரூபக் காட்சியில் மோசே, எலியா தோன்றக் காரணம் என்ன ?

   மோசே - மோசேயின் நீதிச்சட்டங்களை இயேசு பூரணப்படுத்தினார்.

   எலியா - இறைவாக்குகள் யாவும் ஆண்டவர் இயேசுவில் நிறைவேறியது.

# இறையரசின் விழுமியங்களை கடைப்பிடித்து ஒழுங்காற்றல் நிறைந்த சமூகத்தை உருவாக்க பங்களிப்பு வழங்க வேண்டும்

## இறையரசின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருத்தல்

## இறையரசின் வளர்ச்சி

**கிறிஸ்தவர்களாகிய எமது பிரதான எதிர்பார்ப்பு**

- இறையரசை உரிமையாக்கிக் கொள்ளல்
- இறையரசின் சுபாவமும் அதன் பெறுமதியையும் தமதாக்கிக் கொள்ளல்
- இந்த உலக வாழ்வில் நாம் எவ்வாறு செயற்பட வேண்டும்?
- நம்மை எவ்வாறு அர்ப்பணிக்க வேண்டும்?

**இயேசுவின் போதனையில் பிரதான கருத்தான “இறையரசு”**

லூக்கா 1:33 அவருடைய ஆட்சிக்கு முடிவே இராது

லூக்கா 4:43 நான் மற்ற ஊர்களிலும் இறையாட்சியைப் பற்றி நற்செய்தி அறிவிக்க வேண்டும். இதற்காகவே நான் அனுப்பப்பட்டிருக்கிறேன்.

லூக்கா 9:2 இறையாட்சிப் பற்றிப் பறைசாற்றவும் உடல் நலம் குன்றியோரின் பிணி தீர்க்கவும் அவர்களை அனுப்பினார்.

லூக்கா 9:11 அவர்களை அவர் வரவேற்று இறையாட்சியைப் பற்றி அவர்களோடு பேசி குணமாக வேண்டியவர்களைக் குணப்படுத்தினார்.

இறையரசு என்பது முழு உலகிலும் நிலவும் இறைவனின் ஆதிக்கம். மனித உள்ளங்களில் இவ்வுண்மை நிலை கொள்ளும் போது மாத்திரமே மனுக்குலம் முழுமை அடையும். எமக்குள்ளும் எம் மத்தியிலும் இருப்பது இறையரசு ஆகும்.

**இறையரசின் வளர்ச்சி பற்றி மிகவும் இலகுவான உவமைகளை இயேசு பயன்படுத்தினார்.**

லூக்கா 13:18-19 கடுகு விதை உவமை

லூக்கா 13:20-21 புளிப்பு மாவைப் பற்றிய உவமை
(மாவு புளிப்பாகும் விடயம் மனிதர்களின் கண்களுக்கு தெரியாத மிகவும் ஆச்சரியமான ஒரு காரியம். தெரியாதவாறு வளர்ச்சியடைதலாகும்.)

லூக்கா 8:4-15 விதைப்பவனின் உவமை

**இறையரசின் வளர்ச்சியை அனுபவிப்பதற்குத் தேவைப்படுபவை**

- ❖ இயேசுவினுடைய நோக்கம் எங்களுக்குள்ளே இருத்தல்
- ❖ இயேசுவினுடைய அதிகாரத்திற்கும் அரசாட்சிக்கும் உட்படுதல்
- ❖ இறைவசனத்தை தினந்தோறும் தியானித்து அதன்மூலம் கடவுளின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளல்
- ❖ தொடர்ச்சியாக ஜெபத்திலும் விசுவாசத்திலும் இருந்து இறைவனின் விருப்பத்தைத் தேடுதல்.

**இறையரசையும் உலக அரசையும் குறித்த ஒப்பீடு**

| இறையரசு | உலக அரசு |
|---|---|
| ❖ அதிகாரம் - ஆண்டவரிடமுள்ளது. | ❖ பலத்தின் அதிகாரம். |
| ❖ தலைமைத்துவம் - ஆண்டவர் ஏற்பார். | ❖ அரசர் அல்லது அதிகாரியிடம் உண்டு. |
| ❖ குடியுரிமை - இறை விருப்பத்தை செய்யும் அனைவருக்கும் உரியது. இனம் மொழி நிறம் பிரிவுகளுட்படாது. | ❖ மக்கள் |
| ❖ இட எல்லை - இல்லை. உலகில் வாழும் மக்களின் உள்ளத்திற்குள் இறையரசு முழுமையாகும். | ❖ குறிப்பிடப்பட்ட இட எல்லை உண்டு. |
| ❖ சட்டங்கள் மற்றும் கட்டளைகள் - அன்பை மையமாகக் கொண்டு இயேசுவினால் கற்பிக்கப்பட்ட போதனைகள். | ❖ சட்டங்கள் மற்றும் கட்டளைகள் உண்டு. |
| ❖ இவ்வுலகிலும் மறுவுலகிலும். | ❖ இவ்வுலகில் மட்டும்தான். |
| ❖ அழியாதுது. | ❖ அழிவுறும். |

**தரம் 10 - பாடம் 21**

# இறையரசின் அடையாளமும் அற்புதங்களும்

## இறையரசின் அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் இறை வல்லமையைக் காணலாம்.

| | |
|---|---|
| லூக்கா 8:22-25 | காற்றையும் நீரின் கொந்தளிப்பையும் அடக்குதல் |
| லூக்கா 9:10-17 | 5000 பேருக்கு உணவளித்தல் |
| லூக்கா 8:40-42, 49-56 | யாயிரின் (யவீருவின்) மகள் உயிர்த்தெழுதல் |
| லூக்கா 7:11-17 | நயீன் ஊர்க் கைம்பெண் மகன் உயிர் பெறுதல் |
| லூக்கா 4:31-37, 11:14-23 | பேய் பிடித்தவர் குணப்படுதல் |
| லூக்கா 18:35-43 | எரிகோவில் பார்வையற்றவர் பார்வை பெறுதல் |
| லூக்கா 7:1-10 | நூற்றுத் தலைவரின் பணியாளர் குணமடைதல் |

- ❖ நாளாந்த வாழ்வில் இறைவல்லமையை விசுவாசத்துடன் அனுபவிக்க வேண்டும்.
- ❖ இயேசு இயற்கைக்கு மேலாக இறைவல்லமையுடன் செயற்பட்டார்.

உதாரணம் :-
- i. காற்றையும் கடலையும் அமர்த்தியது.
- ii. 5000 பேருக்கு உணவளித்தல்.
- iii. இறந்தோரை உயிரோடு எழுப்பினார்.
- iv. தீய ஆவிகளை துரத்தி தீய வல்லமையை வெற்றிக்கொண்டார். லூக்கா 4:31-37, 11:14-23
- ஏ. பல நோயாளர்கள் குணப்பட்டனர். லூக்கா 7:1-10, 18:35-43

**இயேசு செய்த அடையாள அற்புதங்கள் ஊடாக**

- ❖ இறைவன் மனிதனுக்கு காண்பிக்கும் அளவற்ற அன்பு விளங்குகிறது.
- ❖ இறைவன் மனிதனுக்கு வெளிப்படுகிறார்.
- ❖ இறை மகிமையும் வல்லமையும் வெளிப்படுகின்றன.
- ❖ இயேசு இறைமகன் என்று உறுதிப்படுத்தப்படுகின்றது.
- ❖ இயேசுவின் தூதுப்பணி உறுதிப்படுத்தப்படுகின்றது.
- ❖ இறையாட்சியின் அடையாளம் மிளிர்கிறது.

**இறையரசின் அடையாளங்கள்**

**(எமது வாழ்வில் அற்புதங்களை அனுபவிக்கும் நாம் செயல்படவேண்டிய குணவியல்புகள்)**








குருதி நன்கொடை வழங்கும் நிகழ்வு

1 யோவான் 2:4





**கொழும்பு மறைமாவட்ட, இலங்கைத் திருச்சபை கிறிஸ்தவ கல்விமன்றத்தால் தயாரிக்கப்பட்டது**

# இறையரசின் விழுமியங்களை கடைபிடித்து ஒழுக்கம் நிறை சமூகத்தை கட்டியெழுப்ப வேண்டும்

## இறையரசின் கொள்கை

- இறையரசின் கொள்கைகளை விளங்கிக் கொள்ள வேண்டும்.
- இறையரசின் கொள்கைக்கேற்ப வாழ வேண்டும்.
- இறையரசின் கொள்கைகளுக்கேற்ப வாழும் போது வாழ்வானது நல்வழிப்படும்.
- இறையரசின் கொள்கையை மதிக்க வேண்டும்.

**கொள்கை என்றால் என்ன ?**

சட்டம் (Law)

- எமது வாழ்வுக்கு கொள்கைகள் அவசியம்
- அனைத்து நாடுகளுக்கும் கொள்கை வெளியிடும் உரிமை உள்ளது.
- தனித்துவமாக அடையாளப்படுத்தப்பட்ட கொள்கைகள்
- வாழ்வானது கொள்கைகளால் நல்வழிப்படுத்தப்படுகின்றது.
- இயேசு, கிறிஸ்தவர்களுக்கு ஏற்ற கொள்கைகளைக் கூறினார்.

**லூக்கா 14:15-24 பெரிய விருந்து உவமை**

அழைப்பு

↓

நிராகரிப்பு (சாட்டு போக்கு)

↓

மீண்டும் அழைத்தல்

↓

யூதர் அல்லாத ஏனையவர்கள் (சமூதாயத்தில் ஒதுக்கப்பட்டவர்கள்)

**இந்த உவமையினூடாக கொடுக்கப்படும் உண்மைகள்**

1. இறையரசு எல்லோருக்கும் திறந்திருக்கும்.
2. கடவுளுடைய தீர்மானத்திற்கு ஏற்ப இறையரசு முழுமையடையும்.
3. கடவுளால் மட்டுமே தேவராஜ்ஜியத்திற்கான அழைப்பு விடுக்கப்படுகின்றது.
4. உலக பிரகாரமான காரணத்தினால் கடவுளுடைய அழைப்பை நிராகரிக்கும் மக்கள் சமூகம் உலகிலே வசிக்கின்றார்கள்.
5. கடவுளுடைய அழைப்பை நிராகரிக்கின்றவர்களுக்கு அதனுள் பிரவேசிக்கும் உரிமை அற்றுப் போய்விடும்.
6. சமூகத்தால் நிராகரிக்கப்பட்டதன் விளைவாக, தாங்கள் இறையரசிற்கும் பொருத்தமற்றவர்கள் என்று நினைத்தாலும் அதனால் கடவுளோடு சிறந்த உறவுக்குள் இருக்கின்றவர்களுக்கு இறையரசிலே விசேட அழைப்பு கிடைக்கப் பெறும்.
7. இறையரசின் அழைப்பைப் பெற்றவர்கள் நீதியிலும் இரட்சிப்பிலும் அலங்கரித்து இருக்க வேண்டும்.

**லூக்கா 15:1-7** **காணாமற் போன ஆடு பற்றிய உவமை**

1% ஆகையால் 1/100 (தொலைந்ததை தேடுதல்)

**லூக்கா 15:8-10** **காணாமற் போன திராக்மா உவமை**

10% ஆகையால் 1/10 (கிடைக்கும் மட்டும் தேடுதல்)

**லூக்கா 15:11-32** **காணாமற் போன மகன் உவமை**

50% ஆகையால் 1/2

- ❖ திரும்பவும் தகப்பனின் வீட்டிற்கு வருவதும் தகப்பன் அன்போடு ஏற்றுக்கொண்டு விருந்து நடத்துவது.
- ❖ மூத்த மகன் விரோதத்தைக் காண்பித்தல்.

**காணாமற் போன மகனின் உவமைக்கூடாக வெளிப்படுகின்ற இறையரசின் கொள்கைகள், அபிலாசைகள்.**

- ❖ எங்களுடைய பாவத்தினாலும் கீழ்ப்படியாமையாலும் நாங்கள் எவ்வளவோ தூரம் கடவுளிடமிருந்து விலகிப் போனாலும், சதா காலமும் அவர் எங்களின் பிதாவாகவும் அவரின் பிள்ளைகளாகவும் இருக்கின்றோம்.
- ❖ நாம் பாவத்திலிருந்து மீண்டு அவரிடத்திற்கு வருகின்ற வரை ஆண்டவர் நமக்காக காத்து இருக்கின்றார்.
- ❖ ஆண்டவருடைய அளவில்லாத அன்பை எல்லாப் பாவிகளும் அனுபவிப்பதும் இறையரசின் எதிர்பார்ப்பாகும்.
- ❖ கடவுளுடைய அன்பு பற்றி நாம் தொடர்ச்சியாக மாறுத்தரம் காண்பிப்பதோடு, அந்த அன்பை அனுபவித்து பிறருக்கு அந்த அன்பின் நற்செய்தியைக் கொண்டு செல்ல வேண்டும்.


# இறையரசின் பிரஜைகள்

- ❖ நமது ஆற்றல்களை தாழ்மையுடன் இறை கௌரவத்திற்காக பாவிக்க வேண்டும்.
- ❖ இறையரசின் பிரஜைகளின் பண்புகள் இயல்புகளை விளங்கி செயல்பட வேண்டும்.
- ❖ இயேசுவின படிப்பினைகளுக்கேற்ப இறையரசின் பிரஜைகள் எப்போதும் நல்லதையும் சரியானதையும் செய்ய வேண்டும்.
- ❖ தலைமைத்துவத்தை ஏற்பவர் பணியாளராக இருக்க வேண்டும். (லூக்கா 22:24-30)
- ❖ மற்றவர்களுக்காக உழைக்க வேண்டும். (லூக்கா 10:25-37)
- ❖ முன்மதியோடு செயற்படுதல் இறையரசின் பிரஜைகளின் பொறுப்பாகும். (லூக்கா 16:1-9)
- ❖ இறையரசின் பிரஜைகள் மற்றவரின் நல்வாழ்வை கட்டியெழுப்ப தன்னை அர்ப்பணிக்க வேண்டும். (லூக்கா 19:1-27)
- ❖ கிறிஸ்தவ பண்புகளை விருத்தி செய்து இறை மகிமைக்காக பணியாற்ற வேண்டும்.

**<u>விசேட பண்புகளைக் கொண்ட அண்மையில் வாழ்ந்த இறையரசின் பிரஜைகள்</u>**

- ❖ தெரேசா அம்மையார்
- ❖ மகாத்மா காந்தி
- ❖ அருட் தந்தை மைக்கல் றொட்ரிகோ
- ❖ ஆபிரகாம் லிங்கன்
- ❖ மார்டின் லூத்தர் கிங்
- ❖ புளொரன்ஸ் நைட்டிங்கேர்ள்
- ❖ அருட்தந்தை ஜோசப் வாஸ்
- ❖ மலலா
- ❖ நெல்ஸன் மென்டெலா


**<u>சாதாரண உலகில் தலைமைத்துவத்தின் அமைப்பு</u>**




- ❖ தலைவர் கட்டளை இடுபவர்.
- ❖ அதிகாரம் உள்ளவர்.
- ❖ கீழ் உள்ளோர் தலைமைத்துவத்திற்கு சேவை செய்வர்
- ❖ தலைவர், பணியைப் பெற்றுக்கொள்வர்.


# <u>இறையரசின் பிரஜைக்கான தலைமைத்துவத்தின் அமைப்பு</u>

பிரஜைகள்




தலைவர்

- ஒற்றுமையுடன் செயல்படுவர்
- அன்பின் அதிகாரத்தை ஏற்பர்
- தலைவர், இருப்போருக்கு பணி செய்ய கட்டுப்பட்டுள்ளார்.
- கீழே உள்ளோர் பணியைப் பெறுவர்.



உயர்வு தாழ்வின் (தகுதியின்)
அடிப்படையில் கட்டி
எழுப்பப்பட்ட சமுதாயம்.



இணைந்த தலைமைத்துவத்தின்
அடிப்படையில் அமைந்த
கிறிஸ்தவ சமுதாயம்.




**பிதா ஜோசப் வாஸ்**



**இவ்லின் கார்ணி**



**மார்டின் லூதர்**



**ஜோன் வெஸ்லி**



**புனித அன்னை தெரேசா**




**புளொரன்ஸ் நைட்டிங்கேர்ள்**



**வில்லியம் தின்டேல்**



**வில்லியம்**



**ஜோன் கல்வின்**



**இக்னேசஸ் லொயோலா**



**அருட்தந்தை மைக்கல் றொட்றிகோ**



**மகாத்மா காந்தி**

**கொழும்பு மறைமாவட்ட, இலங்கைத் திருச்சபை கிறிஸ்தவ கல்விமன்றத்தால் தயாரிக்கப்பட்டது**

# இறையரசின் சவால்கள்

இறையரசின் விழுமியங்களை கடைப்பிடித்து ஒழுக்கம் நிறைந்த சமூகத்தை கட்டியழுப்புவது இறையரசின் பிரஜைகளாகிய எமது சவால்களும் கடமைகளும் ஆகும்.

இறையரசின் பிரஜையாகுவதற்கு நாம் பல சவால்களுக்கு முகம் கொடுக் வேண்டும, என்று இயேசு பல சந்தர்ப்பங்களில் விளக்கம் கூறியிருக்கிறார். அந்த சவாலுக்கூடாக இறையரசின் பிரஜைகளுக்கான பொறுப்புகளை விளங்கிக் கொண்டு அதற்கு உகந்த மாறுத்தரம் காண்பிப்பதற்கு வழிநடத்தப்பட வேண்டும்.

- ❖ அனைத்து நபர்களுக்கும் வாழ்க்கையில் சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படும்.
- ❖ சவால்கள் வெவ்வேறு விதமாக ஏற்படுகின்றன.
- ❖ சொத்துக்கள், அதிகாரங்கள் போன்றவையும் சவால்களாக முடியும்.
- ❖ வாழ்க்கையில் சவால்களை முறியடித்து, முன் செல்ல வேண்டும்.
- ❖ சவால்களுக்கு முகங்கொடுப்பதினூடாக வாழ்வில் துணிவு கிடைக்கின்றது.
- ❖ சவால்களை வெற்றிக்கொள்வதற்கு இறைவன் வழி நடத்துகிறார்.

மேற் குறிப்பிட்ட சவால்களை மேற்கொள்வதன் மூலம்

- ❖ இறையரசின் பிரஜைகளின் வாழ்க்கை இலகுவானதல்ல.
- ❖ இறையரசின் பிரஜைகளாக பல சவாலான சந்தர்ப்பங்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படும்.
- ❖ இறையரசின் பிரஜைகளாக முகங்கொடுக்க வேண்டிய சவால்கள் பற்றி ஆண்டவர் இயேசு எச்சரிக்கை அளித்த விதங்கள்.

1. **லூக்கா 9:57-62 - அழைப்பின் சவால்**
    - ➢ நரிகளுக்கு குகையும் பறவைகளுக்கு கூடும் உண்டு, மனித குமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை. (58)
    - ➢ கலப்பையில் கையை வைத்து பின்னிட்டுப் பார்ப்பவன் இறையாட்சிக்கு உகந்தவன் அல்ல. (62)

2. **லூக்கா 14:25-33 - மாறுத்தரம் கொடுக்கும் சவால்**
    - ➢ தம் சிலுவையைச் சுமக்காமல் என் பின் வருபவர் எனக்கு சீடராய் இருக்க முடியாது. (27)
    - ➢ என்னிடம் வருபவர் தம் தந்தை, தாய், மனைவி, பிள்ளைகள், சகோதரர், சகோதரிகள் ஆகியோரையும், ஏன் தம் உயிரையுமே என்னைவிட மேலாக கருதினால், அவர் என் சீடராயிருக்க முடியாது. (26)

- ❖ எல்லா உலகப்பிரகாரமான காரியங்களுக்கும் காண்பிக்கின்ற மாறுத்தரங்களைப் பார்க்க இறையரசின் அழைப்பிற்கு மேன்மையான மாறுத்தரத்தை காண்பிக்க வேண்டும்.

- ❖ எமக்கு நாம் காண்பிக்கும் அன்பைவிட மேலான அன்புடன் இயேசுவுக்கு மாறுத்தரம் கொடுக்க வேண்டும்.
- ❖ அழைப்பிற்கு மாறுத்தரம் காண்பிக்கும் போது அதன் பாரதூரத்தன்மையை விளங்கிக் கொள்ள வேண்டும்.
- ❖ அதற்காக இயேவினுடைய அழகிய உதாரணங்கள் உண்டு.

1. லூக்கா 14:28 (கோபுரம் கட்டும் முன் செலவை கணித்தல்)
2. லூக்கா 14:31 (போருக்கு போகும் முன் அரசன் சிந்தித்தல்.)

- ❖ தங்களுடைய அனைத்தையும் விட்டுவிட்டு பணியின் அழைப்பிற்கு மாறுத்தரம் கொடுக்க வேண்டும்.

**லூக்கா 18:9-14 - தாழ்மை**

பரிசேயரும் வரி தண்டுவோரும் - இருவரின் இறை வேண்டல்.

நீதிமானாக இருப்பினும் தாழ்மையாக இருக்க வேண்டும்.

உதாரணம் :- இயேசு சீடர்களின் பாதங்களை கழுவினார்.

லூக்கா 6:24 12:13-34 16:13 16:19-31 18:18-30

செல்வம் உட்பட உலக வளங்களுக்கு ஆசை கொள்ளாதிருக்கும் சவால்

லூக்கா 12:13-21 அறிவற்ற செல்வன் (களஞ்சியத்தை இடித்துக் கட்டுதல்.)

லூக்கா 12:22-34 கவலை வேண்டாம்
(காகம் - விதைப்பதுமில்லை, அறுப்பதுமில்லை.
காட்டு புஷ்பம் - உழைப்பதுமில்லை, நூற்பதுமில்லை.)

லூக்கா 16:13 எந்த வீட்டு வேலையாரும் இரு தலைவர்களுக்கு பணிவிடை செய்ய முடியாது.

லூக்கா 16:19-31 இலாபமும் செல்வமும்.

லூக்கா 18:18-30 இயேசுவை பின்பற்ற விரும்பிய செல்வாரன தலைவர். (செல்வர் ஒருவர் இறையாட்சிக்கு உட்படுவதைவிட ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது.)

## தரம் 10 - பாடம் 25

# இறையரசின் அர்ப்பணிப்பு

- ❖ கிறிஸ்தவன் என்ற வகையில் கடமைகளை ஆயத்தமுடன் செய்யவேண்டும்.
- ❖ ஆயத்தமாகுதல் அவசியம்.
- ❖ ஆயத்தத்தோடும் அர்ப்பணிப்போடும் செயற்படுவோருக்கு நிலைவாழ்வை உரிமையாக்கிக் கொள்ள முடியும
- ❖ ஆயத்தத்தோடு செயற்படும் போது சவால்களை வெற்றி கொள்ள முடியும்.

**<u>இறையரசின் உச்சக்கட்டமானது இயேசுவினுடைய இரண்டாம் வருகை</u>**

இதைப்பற்றி இயெசு இவ்வாறு கூறியிருக்கிறார்.

திரு வெளிப்பாடு 22:12 "இதோ! நான் விரைவில் வருகிறேன். அவரவர் செயலுக்கு ஏற்ப அவரவருக்கு நான் அளிக்க விடுக்கின்ற கைம்மாறு என்னிடம் உள்ளது.

**<u>அதற்கான முதற்படி :-</u> லூக்கா 12:35-40**

கிறிஸ்து மீண்டும் வரும் வரையும் இறைவிருப்பத்தை நிறைவேற்றி நம்பிக்கையோடு இருக்க வேண்டும்.

லூக்கா 12:35 "உங்கள் இடையை வரிந்து கட்டிக் கொள்ளுங்கள். விளக்குகளும் எரிந்து கொண்டிருக்கட்டும்."

**விழித்திருத்தல்** → **எதிர்ப்பார்த்திருத்தல்** → **ஆயத்தமாக இருத்தல்** → **பொறுமையோடு இருத்தல்**

இதனால் இயேசுவினுடைய விசேட கிருபையும் அன்பும் கிடைக்கின்றது.

- ➢ பிள்ளைகளே நீங்கள் அயத்தமா?
- ➢ இயேசுவை ஏற்றுக் கொண்டிருக்கிறீர்களா?
- ➢ மீண்டும் வரும் இயேசுவை ஏற்றுக் கொள்ள ஆயத்தமா?

**<u>இரண்டாம் படி :-</u> லூக்கா 12:42-48**

இயேசு மீண்டும் வரும் வரைக்கும் இறையரசின் பணிக்கு அர்ப்பணித்தவர்களிடத்திலிருந்து அவர் எதை எதிர்ப்பார்க்கின்றார் ?

- ❖ அவரின் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதை எதிர்ப்பார்க்கின்றார்.
- ❖ எப்போதும் அவருக்கு தகுந்த விதத்தில் பணியாற்ற வேண்டும்.
- ❖ அவருடைய தாசர்களை தகுந்த விதத்தில் கவனிக்க வேண்டும்.
- ❖ தமது உலக ஆசைகளை அவருக்காக தியாகம் செய்ய வேண்டும்.
- ❖ இயேசுவினுடைய விருப்பப்படியும் அவருடைய வார்த்தைக்கு இணங்கவும் ஒழுங்கமைப்போடும் பொறுப்புடனும் பணி செய்ய வேண்டும்.

லூக்கா 12:48 "மிகுதியாகக் கொடுக்கப்பட்டவரிடம் மிகுதியாகவே எதிர்ப்பார்க்கட்டும். மிகுதியாக ஒப்படைக்கப்படுபவரிடம் இன்னும் அதிகமாகக் கேட்கப்படும்."

**<u>மூன்றாம் படி :-</u>** **லூக்கா 13:1-9 (மனம் மாறாவிடில் அழிவு)**

நிலைவாழ்வை பெற்றுக் கொள்வதற்கு மனமாற்றம் அவசியமாகும்.

மாற்கு 1:4 "பாவ மன்னிப்பு அடைய மனம் மாறித் திருமுழுக்குப் பெறுங்கள்."

பாவத்திற்கான மனம் திரும்புதல்

↓

ஆண்டவருடன் உறவு

↓

நித்திய ஜீவன்

நான்காவது படி :- லூக்கா 13:22-30

இறையரசிற்குள் நுழைதல் இடுக்கமான வாயிலுக்குள் நுழைவதைப்போல் கடினமாகும்.

**நிலை வாழ்வுக்குரிய வழி** → **ஒடுக்கம் அநேக துன்பம் கடினம்** → **ஆனால் இறுதியில் கிடைப்பது, அழிந்து போகாத பெரிய விருந்துபசாரம் அதுதான் நிலை வாழ்வு.**

**<u>இறையரசின் பிரஜைக்கு அனுமதி கிடைக்காதவர்கள்</u>**

- ❖ அவருடைய அன்பின் உறவுக்குள் உட்படாதவர்கள்.
- ❖ அநியாயங்கள் செய்கிறவர்கள்.
- ❖ ஆண்டவர் இயேசுவை சரியாக புரிந்து கொள்ளாதவர்கள்.

லூக்கா 13:30 "கடைசியானோர் முதன்மையாவர்; முதன்மையாவர் கடைசியாவர்."

**எனவே இறையரசின் பிரஜைகள்**

- ❖ கிறிஸ்து மீண்டும் வரும் வரை
- ❖ தொடர்ச்சியாக ஆயத்தமாகவும் விசுவாசமுள்ளவர்களாகவும் பொறுப்பு உள்ளவர்களாகவும் பணி செய்ய வேண்டும்.
- ❖ உண்மையாகவே மனம் திரும்ப வேண்டும்.
- ❖ தொடர்ச்சியாக இயேசுவோடு ஆழமான உறவுக்குள்ளே உட்பட வேண்டும்.

# திருவிவிலியத்தை வாழ்விற்கு வழி காட்டியாக கொள்ள வேண்டும்.
# இறைவார்த்தையால் ஒளி பெறல்

இந்த உலகிலே இறையரசை ஸ்தாபித்து, அதை நிறைவு செய்வதற்கு, மக்களை அறிவூட்டுவதற்கு இயேசு பலவிதமான கற்பித்தல் முறைகளை உபயோகித்தார். அவற்றுள் போதனைகள் மூலமாக அறிவூட்டுவது ஒரு முறையாகும்.

### லூக்கா 6:20-23 சமவெளிப் பொழிவு – பேறுபெற்றோர்

| | | |
|---|---|---|
| 20 | ஏழைகளே | இறையாட்சி உங்களுக்கு உரியதே |
| 21 | பட்டினியாய் இருப்போரே | ஏனெனில் நீங்கள் நிறைவு பெறுவீர் |
| 22 | அழுது கொண்டிருப்போரே | ஏனெனில் நீங்கள் சிரித்து மகிழ்வீர்கள். |
| 23 | மானிட மகன் பொருட்டு மக்கள் உங்களை வெறுத்து, ஒதுக்கி வைத்து, நீங்கள் பொல்லாதவர் என்று இகழ்ந்து தள்ளிவிடும் போது | அந்நாளில் துள்ளி மகிழ்ந்து கொண்டாடுங்கள்; ஏனெனில் விண்ணுலகில் உங்களுக்கு கிடைக்கும் கைம்மாறு மிகுதியாகும். |

### லூக்கா 6:24-26 கேடுற்றோர்

24 செல்வர்களே ஐயோ! உங்களுக்குக் கேடு! ஏனெனில் நீங்கள் எல்லாம் அனுபவித்து விட்டீர்கள்.

25 இப்போது உண்டு கொழுந்திருப்போரே, ஐயோ! உங்களுக்குக் கேடு! ஏனெனில் பட்டினி கிடப்பீர்கள்.

25 இப்போது சிரித்து இன்புறுவோரே, ஐயோ! உங்களுக்குக் கேடு! ஏனெனில் துயருற்று அழுவீர்கள்.

26 மக்கள் எல்லாரும் உங்களைப் புகழ்ந்து பேசும் போது ஐயோ! உங்களுக்குக் கேடு! ஏனெனில் அவர்களின் மூதாதையரும் போலி இறைவாக்கினருக்கு இவ்வாறே செய்தார்கள்.

### லூக்கா 6:27-36 பகைவரிடம் அன்பு காட்டுதல்

6:31 “பிறர் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்களோ, அதையே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்.”

**லூக்கா 6:37-42 தீர்ப்பிடுதல்**

6:41 “நீங்கள் உங்கள் கண்ணில் இருக்கும் மரக்கட்டையைப் பார்க்காமல் உங்கள் சகோதரர் அல்லது சகோதரியின் கண்ணில் இருக்கும் துரும்பைக் கூர்ந்து கவனிப்பதேன்? ”

**லூக்கா 6:43-45 மரமும் கனியும்**

6:45 “நல்லவர் தம் உள்ளமாகிய நல்ல கருவூலத்திலிருந்து நல்லவற்றை எடுத்துக் கொடுப்பர். தீயவரோ தீயதினின்று தீயவற்றை எடுத்துக் கொடுப்பர். உள்ளத்தின் நிறைவையே வாய் பேசும்.”

**லூக்கா 6:46-49 இருவகை அடித்தளங்கள்**

எங்களின் (எங்களுடைய) வாழ்வின் அடித்தளமானது என்ன?

- ❖ இயேசுவின் சமவெளிப் போதனை
- ❖ எமது வாழக்கைப் பயணத்திலே விழுந்துவிடாமல் முன்னோக்கிச் செல்ல இறைவார்த்தையான அடித்தளம் மிகவும் அவசியம்.
- ❖ நல்லதொரு வாழ்க்கை முறை

**★ யாக்கோபு 1:22**

“இறைவார்த்தையைக் கேட்கிறவர்களாக மட்டும் இருந்து உங்களை ஏமாற்றிக்கொள்ள வேண்டாம். அதன்படி நடக்கிறவர்களாயும் இருங்கள்.”

# திருவிவிலியத்தை வாழ்விற்கு வழிகாட்டியாக கொள்ள வேண்டும். இயேசுவின் போதனைகளை அன்றாட வாழ்வில் பின்பற்ற வேண்டும் (நாளாந்த வாழ்விற்கு வழிகாட்டி)

**திருப்பாடல்கள் 119:105** **“என் காலடிக்கு உம் வாக்கே விளக்கு! என் பாதைக்கு ஒளியும் அதுவே!”**

1. **லூக்கா 11:1-13 இறைவனிடம் வேண்டக் கற்றுக்கொடுத்தல்**

- ❖ இயேசு தம் பணியை ஆரம்பிக்கும் முன் பாலை நிலத்தில் 40 நாட்கள் உபவாசமாக இருந்து ஜெபித்து தனது பணிக்காக ஆயத்தமாகினார்.
- ❖ விண்ணக வேண்டல் (கர்த்தருடைய ஜெபம்) நாளாந்த வாழ்வுக்கு அவசியம்.

லூக்கா 11:13b “விண்ணகத் தந்தை தம்மிடம் கேட்போருக்குத் தூய ஆவியைக் கொடுப்பது எத்துணை உறுதி! ”

2. **லூக்கா 8:16-18 விளக்கு உவமை**

யாரும் விளக்கை ஏற்றி மூடி வைப்பதில்லை. நாம் ஒளியின் பிள்ளைகளாக திகழ வேண்டும்.

- ❖ நாம் பிறரது வாழ்வை ஒளியூட்ட வேண்டும்.

3. **லூக்கா 14:34-35 உப்பு நல்லது**

சாரமற்று போனால் அது குப்பையிலே வீசப்படும்.

- ❖ எதிர்ப்பார்ப்பின்றி இறைவனுக்கு பணியாற்ற வேண்டும்.

4. **லூக்கா 18:1-8 நேர்மையாற்ற நடுவரும் கைம்பெண்ணும் பற்றிய உவமை**

தாம் தேர்ந்துகொண்டவர்கள் அல்லும் பகலும் தம்மை நோக்கிக் கூக்குரலிடும்போது கடவுள் அவர்களுக்கு நீதி வழங்காமல் இருக்கமாட்டார். அவர்களுக்குத் துணைசெய்யக் காலம் தாழ்த்தமாட்டார். விரைவில் அவர்களுக்கு நீதி வழங்குவார்

- ❖ மனந்தளராமல் எப்பொழுதும் இறைவனிடம் மன்றாட வேண்டும்.

5. **லூக்கா 14:7-11 பிறரை உபசரித்தல் - விருந்தினருக்கும் வீருந்தளிப்போருக்கும் ஒரு போதனை**

முதன்மையான இடத்தில் அமரக்கூடாது.

லூக்கா 14:11 “தம்மைத்தாமே உயர்த்துவோர் யாவரும் தாழ்த்தப் பெறுவர்; தம்மைத்தாமே தாழ்த்துவோர் உயர்த்தப்பெறுவர்.”

- ❖ சமூதாயத்தில் ஒதுக்கப்பட்டவர்களில் நாம் கரிசனை கொள்ள வேண்டும்.

6. **லூக்கா 17:5-10 இயேசுவின் அறிவுரை**

- ❖ 6ம் வசனம் - கடுகளவு விசுவாசம்.
- ❖ விசுவாசத்துடன் செயற்பட வேண்டும்.